# பாரதமணி

தாரண வருடம் ஆனி மீ
விலை அணா 4
JUNE 1944



ஸ்ரீ வி. ராகவ அய்யங்கார்




ஸன்லைட் கெமிஸ்டு
சொல்லுகிறார் . . .

“அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தானாகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் “பிராணசக்தி” வாய்ந்த சோப் இருக்கிறது. ‘பிராணசக்தி’ வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினால் கசக்கினால் இந்த ‘பிராணசக்தி’யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன் அழுக்குப் போய்விடுகிறது.”

# ஸன்லைட் சோப்

**சுயமாக வெளுக்கும் நுரை உடையது**




S. 62-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு





மாத வெளியீடு

*ஆசிரியர் :*
கா. சி. வேங்கடரமணி

*காரியாலயம் :*
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 | தனிப்பிரதி அணா 4

| மாலை 11 | **JUNE 1944** : தாரண ௵ ஆனி ௴ | முத்து 6 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | *விஷயம்* | | | *பக்கம்* |
|---|---|---|---|---|
| 1. | பகல் வேஷம் | ... | கௌண்டின்யன் | ... 189 |
| 2. | அப்பரின் உபதேச மும்மணிகள் | ... | பி. ஸ்ரீ. | ... 199 |
| 3. | இந்தியாவின் துறைமுகங்கள் | ... | ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி, பி.ஏ., பி.எல். | ... 202 |
| 4. | ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் | ... | ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல். | ... 205 |
| 5. | தாயாதிக் காய்ச்சல் | ... | டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம். | ... 208 |
| 6. | ஸ்ரீமான் வி. ராகவ அய்யங்கார் | ... | கா. சி. வேங்கடரமணி | ... 213 |
| 7. | அஜீர்ணம் | ... | திருஷ்ட கர்மா | ... 216 |
| 8. | புதுப் புத்தகங்கள் | ... | | ... 220 |
| 9. | புதிய தமிழ் இலக்கியப் போக்கின் வேகம் | | சி. வைத்தியலிங்கம் | ... 228 |



"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி
லிமிடெட்

மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்

இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்

1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின்
புதிய பாலிசிகள் ரூ. 5 கோடிக்கதிகம்

| | |
|---|---|
| ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ....ரூ. | 5,39,00,000 |
| அமுலிலுள்ள மொத்த வியாபாரம் ....ரூ. | 24,82,00,000 |

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி,
லிமிடெட்.,

107, அரண்மனைக்காரத் தெரு.

ஜி. டி. மதராஸ்.

# க்ளூகோனேட்-D.

## கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

## விடமின் D சேர்ந்தது

❋

**உட்கொள்ளக் கூடிய சாக்லட் வடிவில்**

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம், குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

❋

**I. T. L. தயாரிப்பு**

## கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரடரி

மல்லேச்வரம் P. O. :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :-

மெஸர்ஸ் : **பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.**

தபாற் பெட்டி நெ. 63, — மதராஸ்.

# உங்கள் வருவாயும் செலவும்

நீங்கள் மாதம் நூறு ரூபாய் சம்பாதித்து, உங்கள் செலவு தொண்ணூறு ரூபாயானால், நீங்கள் மிகவும் சந்தோஷமடைவீர்கள். ஆனால் அதே சமயம் உங்கள் நூறு ரூபாய் சம்பாத்யத்தில் நூற்றொன்று ரூபாய் செலவாகுமாகில் நீங்கள் வருந்துவீர்கள்.

ஆகையால் எதிர்காலத்தைப் பற்றி முன் கூட்டியே யோசிப்பது, உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு அறிகுறியாகும். உங்கள் வருவாயில் அதிகபக்ஷ பலனை பெறுவது உங்கள் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். உங்கள் வாழ்க்கை திட்டத்தில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸும் ஒரு ஸ்தானம் பெறுவதவசியம். அப்படி செய்தால், உங்கள் வருவாய் மூலம், நீங்கள் கனவிலும் எதிர்பாராத பலனை பெறுவீர்கள்.

## யுனைடெட் இந்தியா லைப்
## அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**எஸ்பிளனேட் மதராஸ்.**

**இந்தியா பூராவும் பிராஞ்சுகளும் ஏஜென்ஸிகளும் உண்டு.**

# பகல் வேஷம்

[ கௌண்டின்யன் ]

புதுமையில் மோகம் கொண்ட இக்காலத்தில் பகல் வேஷம் என்ற வேடிக்கையே ஜனங்களுக்கு அனேகமாக மறந்து போயிற்று. ஆகையால் அதைக் கொஞ்சம் விவரிப்போம். நவராத்திரி முதலிய உற்சவ காலங்களில் இந்த வித்தையில்—ஆம், நமது தேசத்தில் திருட்டுத் தொழில்கூட ஒரு கலையாகக் கருதப்பட்டு வந்திருக்கிறதல்லவா ?—தேர்ச்சி பெற்றவன் நாளுக்கொரு வேஷம் பூண்டு பத்து நாளும் வீடு வீடாகச்சென்று குழந்தைகளுக்குப் பயத்தையும் பிறகு ஆனந்தத்தையும் பெரியவர்களுக்குத் திகைப்பு அதன் பின்னே நகைப்பு இவ்வித விபரீத விநோதங்களையும் விளைவித்துச் சம்மானம் பெற்றுச் செல்வது வழக்கம். இன்றைக்கு டில்லியிலிருந்து நேரே வந்திறங்கின பாதுஷா சக்ரவர்த்தி—அப்பாடா! என்ன கருக்கு மீசை, கூரில் எலுமிச்சம்பழம் குத்தலாம் போலிருக்கிறதே, என்ன பயங்கரமான கண் மிரளல், பட்டாக்கத்திக்குத்தான் என்ன பளபளப்பு, என்ன சரமாரியான சொற்பொழிவு—அர்த்தம் விளங்காததாலேயே அது ஹிந்துஸ்தானியாகத்தான் இருக்கவேணும்! அடுத்தநாள் பாதுஷாவுக்கு வைராக்கியம் வந்துவிடுகிறது. பூஜ்யரான திரிதண்ட ஸந்நியாஸியாக ஆவிர்பவிக்கிறார். ராவண ஸந்நியாஸியும் அவரிடம் பிச்சை வாங்க வேணும். மூன்றாம்நாள் 'முளையில் அறுத்த கைம்பெண். அந்தோ, என்ன துக்கம், என்ன நாணம், என்ன பரிதாபம், நல்ல வேளையாக அந்த நாளில் ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் அதிகமாக ஏற்படவில்லை, இல்லையேல் அவள் கஷ்டத்தை அந்த தயாவான்கள் அரைக் கணமும் பொறுத்திருக்கமாட்டார்கள். இவ்விதம் ஒருநாள் வந்ததுபோல் மற்றொருநாள் வராமல் பகல் வேஷக்காரன் பலவிதக் காக்ஷி தந்து உற்சவம் முடிந்ததும் விடாயாத்தும் சம்பிரதாயத்தையொட்டி யாதொரு வேஷமுமில்லாமல் நித்தியம் உடுக்கும் கந்தல் உடையுடனும் சகஜமான நடையுடனும் இனும் வாங்கும் பாவனையுடனும் அரிசி வாங்கப் பெரிய கூடையொன்று தோளிலும் வாயில் முப்பத்திரண்டு பல்லும் தெரிய இளித்துக்கொண்டு பெரிய கும்பிடுபோட்டு இடைக்கட்டு வாயிலில் வந்து நிற்கும்போது குழந்தைகளுக்கு இவன்தான் பகல் வேஷக்காரன் என்றால் நம்பிக்கை எப்படிவரும் ? ஏன், வயதானவர்களுக்குங்கூடச் சற்று ஏமாற்றம்தான். போட்ட வேஷங்கள் பொய்யானாலும் எவ்வளவழகாய்ப் பலித்திருந்தன! நவாப்பாய் பிறந்தவன்கூட அவ்வளவு கம்பீரமான ராஜ பார்வை பார்க்கமுடியுமா ? இவ்வளவு சாதுரியமும், நடிப்புத் திறனும் அரைப்படி அரிசிக்கும் அரையணாக் காசுக்குமா ஈடுபடுவது என்ற கேள்விகள் ருசனையுள்ளவர்கள் மனத்தில் ஒரு சமயம் எழலாம். பகல் வேஷக்காரனுக்கோ ஒரு தெருப்போவதற்குள் கூடை நிரம்பி விடும்.

இந்தப் பழைய வேடிக்கைக்கு இப்பொழுது அதிக 'மௌஸு' இல்லாததில் ஆச்சரியமொன்றுமில்லை. நமது நவநாகரிகமே ஒரு ஓயாப் பகல் வேஷமாக இருக்கிறதல்லவா ? இதை விளக்கும் 'பிராக்ருத இதிஹாஸம்' ஒன்று உண்டு. அறுபது வயது வரையில் ரயில் ஏறாத ஒரு கிழவர் சமீபத்தில் ராமநாதபுரத்திலிருந்து சென்னை வர நேர்ந்தது. பரம வைதிகர், உத்தம ஸ்ரீ வைஷ்ணவர், இரண்டு சாஸ்திரங்கள் வரும். புதுக்

கோட்டையில் சம்மானம் உண்டு. அதைப் பெறுவதற்கு வருஷம் தோறும் கால் நடையாகவே செல்வது வழக்கம். இப்பெரியார் விதியின் கூற்றால் இப்பொழுது ரயில் ஏறவேண்டியது அவசியமாயிற்று. தன் அருமை தௌஹித்திரன் கிங்ஸ் கமிஷன் பெற்று ராணுவத்தில் அமர்ந்து பல ஊர்களில் வேலை பார்த்துத் தற்சமயம் அயல் தேசங்களுக்குச் செல்லுமுன் பத்துநாள் ரஜாவில் தான் பட்டணம் வருவதாகவும், ஊருக்கு வர அவகாசமில்லாததால் தன்னைப் பார்க்க விரும்புவோர் சென்னை வந்து பார்த்துப் போகலாமென்றும் எழுதியிருந்தான். தன் காலஞ்சென்ற ஒரே மகளுக்கு ஒரே பிள்ளை. அறையில் தாய்விட்டுப்போன குழந்தையை மறுதாரம் செய்துகொண்ட தகப்பன் கவனிக்காததால் பாட்டனர் எடுத்து வளர்த்துப் படிக்க வைத்துச் சீராட்டி வந்தார். பையன் வைத்தியப் பரீக்ஷையில் முதல்வனாகத் தேறினதும் சர்க்கார் வேலை கிடைத்தது. ஆனால் ராணுவத்தில் வேலையாதலால் கிழவர் அரை மனதுடன்தான் அதை அங்கீகரித்தார். டாக்டர்கள் ஆசாரங்களை அவ்வளவு பொருட்படுத்துவதில்லை என்று கேள்விப்பட்டிருந்தாலும் இந்தப் பேரனிடம் உள்ள வாஞ்சையால் அவன் அத்தொழிலுக்குப் படிக்க அவர் இசைந்தாரே யொழிய அடுத்தாப்போல் தன் பௌத்திரன் சீனிவாஸன் மெடிகல் காலேஜில் சேரவேண்டு மென்றபோது அவன் தகப்பனர் சம்மதித்தும் கிழவர் குறுக்கிட்டு, "உதவவே உதவாது, எள்ளும் தண்ணியும் இறைக்கிறவனல்லவா? முப்பது தலைமுறையாய் அக்னி ஹோத்திரம் விடாமல் நடத்திவந்த குலத்தில் பிறந்து பாஷண்டனுகவேணுமா? வேண்டவே வேண்டாம். சாதாரணப் படிப்புப் படித்து அதனல் கிடைக்கிற வேலை போதும். அவனுக்கென்ன சம்பாதிச்சாகணும் என்று? ஐம்பதினயிரம் ரூபாய் ஆஸ்தி இல்லையா?" என்று கண்டித்துவிட்டார். அவர் பிள்ளைக்கு இது பக்ஷபாதமாகத் தோன்றினலும் ஒன்றும் சொல்லமுடியவில்லை. சீனிவாஸன் வெகு அதிருப்தியோடு சென்னைப் பெரிய கலாசாலை ஒன்றில் பி. எஸ். ஸி. படிக்கச் சென்றான். அவன் தான் கிழவரை எழும்பூர் ரயிலடிக்கு வந்து அழைத்துச் சென்று பட்டணம் கோயிலில் இரண்டுநாள் தங்குவதற்கு வேண்டிய வசதி செய்வதாக எழுதியதன் பேரில் அன்பின் தூண்டுதலுக் கிணங்கி வெகு துணிச்சலாகக் கிழவர் ரயிலேறி வந்துவிட்டார்.

ரயிலில் தங்கிய 24 மணிநேரம் எப்படிச் சென்றது என்று அவருக்கே தெரியவில்லை. எதைப் பார்த்தாலும் புதிது, எங்கே பார்த்தாலும் எச்சில், தீட்டு, எல்லாம் ஒரே கலப்பு. கிழவர் ஜல பானம் பண்ணவில்லை. ஏன், வாய் எச்சிலைக்கூட விழுங்கவில்லை. காதில் பூணூலும் தலையில் முண்டாசும் பக்கத்தில் மடிசஞ்சியுமாக ஒரு மூலையில் ஒடுங்கிக் கண்ணை மூடிக்கொண்டு நாம ஜபம் செய்ய முயலுவதும் அந்தச் சந்தடியில் அதற்கு வேண்டிய மன அமைதி இல்லாமல் உலகம் போன போக்கை யெண்ணி ஆச்சரியப்படுவதுமாக, ஒரு நாழிகை ஒரு யுகம் போலத்தள்ளி எப்படியோ எழும்பூர் வந்து சேர்ந்தார். பேரன் சீனிவாஸன் அவருக்கிருந்த தளர்ச்சியைக் கண்டு, "வண்டி வைக்கவேண்டாம், வீண் சிலவு, நடந்து போயிடுவோமே?" என்று அவர் சொன்னதைக் காதில் வாங்காமல் ஒரு ஜட்கா அமர்த்திப் பட்டணம் கோயில் என்ற ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதிக்கு அழைத்துச் செல்ல, அங்கே ஸ்நானம் செய்து கர்மாக்களை முடித்துக் கொஞ்சம் பிரசாதம் உட்கொண்டு விடாயாற்றின பிறகு பேரனை விவரமாக யோக க்ஷேமம் விசாரித்தார். மறுநாள் காலையில்தான் அத்தான் கல்கத்தாவிலிருந்து வருவானென்றும் அன்று சாயங்கரமே பம்பாய்க்குக் கிளம்பி விடுவான் என்றும் அவன் சொன்னதன் பேரில் அன்றைப் பொழுதைப் போக்குவதற்குப் பட்டணம் சுற்றிப் பார்ப்பதென்று தீர்மானித்தார்.

இது சீனிவாஸனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. அன்று சனிக்கிழமை,

பெரிய கிரிக்கெட் மாட்சு, ஐந்து ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கியிருந்தான். சாயந்திரம் சினிமாப் போவதாகத் திட்டம் போட்டிருந்தான். வேறு எது தவறினாலும் வாரம் ஒருமுறை சினிமாப் பார்ப்பதில் அவன் தவறுவதில்லை. கிழவரைக் கோயிலிலேயே இருக்கச் செய்து மறுநாள் காலையில் தான் தன் கல்லூரியிலிருந்து வந்து ஸெண்ட்ரல் ஸ்டேஷன் அழைத்துச் செல்லுவதாகச் சொல்லித் தப்பலாமென்று மனக்கோட்டை கட்டியிருந்ததெல்லாம் வியர்த்தமாய் விட்டது. தாத்தாவிடம் ஆக்ஷேபிப்பதில் பயனில்லை என்று வெகுநாள் அனுபோகத்தால் தெரிந்துகொண்டிருந்த அவன், "அப்போ, சரி, ஊரெல்லாம் சுத்திப் பாத்துவிட்டு ராத்திரி இங்கே வந்துடலாம்" என்று சொல்ல, "ராத்திரியைப் பத்தி இப்போ என்ன? எனக்கு ஆகாரம் தேவையில்லை. உன் காலேஜில் வந்திருந்துவிட்டுக் காலையில் ரயிலுக்கு வந்தாலும் போகிறது" என்று தாத்தா பதில் சொன்னது அவனுக்கு வயிற்றில் இடிவிழுந்தாப் போலிருந்தது. இருந்தாலும் வெறுப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கிழவரை அழைத்துக்கொண்டு மௌண்ரோட் பக்கம் போகும் டிராமில் ஏறினான்.

காலையில் எல்லோரும் தொழிலுக்குப் போகும் நேரம். வண்டியில் ஏராளக் கூட்டம். கிழவருக்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. பேரனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஓடும் வண்டியில் கீழே விழாமல் எப்படியோ சமாளித்தார். சீனிவாஸன் காதில் மட்டும்படும்படி "காலம் எப்படிக் கெட்டுப்போச்சு பார்த்தாயா? தள்ளாத கிழவனுக்கு இடம் கொடுக்கிறதென்கிற மரியாதை கூட இல்லையே!" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் இரண்டு சட்டைக்கார ஸ்திரீகள் ஓடும் வண்டியை வெகு அமுலாகக் கையைக் காட்டி அமர்த்தி அது நிற்குமுன்பே ஒரு குதிகுதித்து உள்ளே தாவினார்கள். அதைக் கண்டதும் 'நான் முன்னே நான் முன்னே' என்று வண்டியில் அந்தக் கோடியில் உட்கார்ந்திருந்த பத்துப் பேர்கள் ஒரே யடியாய் எழுந்து இடந்தந்து அந்த மாதர்களை அங்கிருக்க உபசாரம் செய்தார்கள். இதைப் பார்த்துப் பிரமித்த கிழவருக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அப்படி எழுந்தவர் பெரும்பாலாரும் தொப்பி தரித்தவர், ஐரோப்பிய ஆடை அணிந்தவர், நெற்றியில் யாதொரு குறியும் தென்படவில்லை. "ஏண்டா பையா, இவர்களெல்லாருங் கூட சட்டைக்காரர்களோ?" என்று பேரனை அவர் வினவவும், அவன் இந்த வார்த்தை அவர்கள் காதில் விழப்போகிறதே என்று லஜ்ஜைப்பட்டுக் கிழவரைத் தாழ்ந்த குரலில் அழுத்தமாக, "அதெல்லாமொண்ணுமில்லே, எல்லாரும் நம் மடவாள்தான், ஆபீஸுக்குப் போரத்துக்காக 'ஸூட்' போட்டிண்டிருக்கா, அவ்வளவுதான்" என்று சொல்லி அவர் வாயைக் கட்ட எண்ணினான். அவரோ, "ஆபீஸுக்குப் போனால் வேஷ்டி கட்டிக்கொண்டு போகப்படாதுன்னு சட்டமுண்டோ? அடுத்தாப்பிலே வெள்ளைக்காரர்கள் நம்மூரிலே வந்திருக்கிறதுக்காக வேஷ்டியோ புடைவையோ கட்டிக்கக்காணுமே! இதோ இந்த அம்மா ரெண்டு பேர் இருக்காளே—அவாளுக்கு இப்பேர ஷோடாசோபசாரம் நடந்ததே தடா! – அவா புடைவை கட்டிண்டா அழகாயிருக்கும்னு எனக்குத் தோணலை. கோர்க்காலியாட்டமா முழங்காலுக்கு மேலே இப்படிப் பாவாடையைக் கட்டிக்கிறதைவிட...." என்று இன்னும் ஏதேதோ சொல்ல வாயெடுக்க, பையன் அவசர அவசரமாக "மெதுவாப் பேசுங்கோ, தாத்தா, அவாள் காதிலே படப்போறது! ராஜ்யம் அவாளுதுன்னு! அவாள் நம்பளைப்போலே இருப்பாளா? அவாள் தயவு சம்பாதிக்கிறதுக்காக நாம்தான் அவாள் நடை உடை பாவனை எல்லாத்தையும் கத்துக்க வேண்டியிருக்கு" என்று சொல்லி அந்தச் சமயம் ஒரு இடம் காலியானதைக் கண்டு கிழவரை அங்கே உட்காரச் செய்தான். விபரீதமாக மேற்கூறிய வெள்ளை ஸ்திரீகளில் ஒருத்தி ஒருபுறமும் மற்றொருபுறம் வாணியன் ஒருவனும்—அவன்

துணி தொழிலைப்பிரகடனம் செய்தது— இருக்க நடுவில் இவர் உட்கார நேர்ந்தது. உடம்பு அயர்வால் 'துவேந்து போகிறது' என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு உட்கார்ந்ததுதான் தாமதம். டிராம் கண்டக்டர் வெகு துடுக்காக, "ஐயரே, துணியெ மேலே போத்து; என்ன இது கொல்லேக்காட்டுக்குப் போற இடம்னு நினேச்சுக்கிட்டையா?" என்று உத்தரவு பண்ணினன். வந்துவிட்டது கிழவருக்குக் கோபம் ரௌத்ராகாரமாக. அந்தப் பயல் ஏக வசனமாகப் பேசினதுமட்டுமல்ல, தன் ஆசாரத்திற்குப் பங்கம் வரும்படித் தலே முண்டாசைஎடுக்கும்படி சொன்னதோடு நில்லாமல், மேலே வேறு, அதைப் பிரித்துப் போற்றிக்கொண்டு தீட்டுப்படும்படி அவன்செய்ய எண்ணினது முழுக் குறும்பு என்று தீர்மானித்துக் குபீலென்று எழுந்து, "அடே, நடந்து போவோம், வா, காலம் கிரிசை கெட்டுக் கிடக்கு, யார் யாரைப் பார்த்து என்ன சொல்லுகிறதுன்னு வரம்பில்லாமல் போச்சு!" என்று பேரனே அதட்டினர். வண்டியில் இருந்தவர்கள் இந்த வார்த்தைகளேக் கேட்டுப் பலஸ்தாயிகளில் சிரிக்கவும், கண்டக்டர், "ஸ்வாமிகளே! என்ன இவ்வளவு கோபம்? ஆசாரம் பூசைப் பொட்டி, அது மேலே மெசைப் பொட்டி, அது மேலே பளேத்துப் பானே! ஏன், தனி மோட்டார்வெச்சுக்கிட்டுப் போறதானே!" என்று ஏளனம் செய்யவும், சீனிவாஸன் உள்ளம் குன்றி, "ஏதடா, இந்த அநர்த்ததில் மாட்டிக்கொண்டு விட்டோமே" என்று திணரும் தருவாயில் நல்ல வேளேயாக அவர்கள் இறங்கவேண்டிய இடம் வந்தது. கிழவரை கையைப் பிடித்து இறக்கி ஜாக்கிரதையாய் ரஸ்தாவைத் தாண்டி நடைபாதையில் ஏற்றி 'பீச்சு'க்குப் போகும் மார்க்கமாய் அழைத்துச் சென்றுன்.

மணி மூன்று, வெயிலோ பொசுக்குகிறது. அந்த ரஸ்தாவில் மர அடர்த்தியாலும், வண்டிப் போக்குவரத்துக் குறைவாலும், நாலுபுறமும் திறந்த வெளியாயிருந்ததாலும் நல்ல காற்றும் அமைதியும் ஒன்றுசேர்ந்து கிழவர் மனதைக்கவர்ந்தன. பத்துத்தப்படிபோனதும், "அப்பா, இங்கே ஒக்காருவோமேடா சித்தநாழி, ஜிலுஜிலுனு இருக்கே!" என்றார். சீனிவாஸன் மரத்தடியில் உட்காரவா வந்தான்? அங்கிருந்து கூப்பிடு தூரத்தில் தான் அன்று மேற்கூறிய பிரபல கிரிக்கெட் மாட்ச். 5 ரூபாய் கொடுத்து வாங்கிய டிக்கெட்டோ சட்டைப் பையில் குடைகிறது. அது வாங்கின விஷயம் தெரிந்தால் கிழவருக்குக் கடுங்கோபம் வந்துவிடும். எப்படி ஆனாலும் மாட்ச்சைப் பார்த்தேதான் ஆகவேண்டும் என்று துணிந்த பேரன் தாத்தாவைப் பார்த்து, "இன்னும் பத்துத்தப்படி போனல் அங்கே இன்னும் வசதியாயிருக்கும்; பெரிய பந்து விளேயாட்டு வேறு நடக்கிறது, பார்க்கலாம்" என்று சொல்லித் தந்திரமாய் கிரிக்கெட் க்ரௌண்டுக்கருகே ரஸ்தா ஓரமாக ஒரு மரத்தடியில் அவரை உட்காரவைத்தான்.

எங்கே பார்த்தாலும் ஒரே ஆரவாரம். வேலியடைப்புக்கு வெளியே தேர்க்கூட்டமாக ஜனங்கள் கூடியிருந்தார்கள். சமீபத்தில் இருந்த மரங்கள் ஒன்று பாக்கியில்லாமல் பத்து, இருபது, முப்பது என்று மனிதக் கூட்டங்களேச் சுமந்து நின்றன. வாலிபர்கள் மட்டுமல்ல, பேரன் பேர்த்தி எடுத்தவர்களும் இவ்விதம் 'கோபுர வஸ்து'க்களாக அவதரித்து ஐந்து நிமிஷத்திற்கொருதரம் கையைக் கொட்டுவதும், புரியாத பாஷையில் ஏதேதோ வார்த்தைகளேச் சொல்லி அட்டஹாஸம் பண்ணுவதும் கிழவருக்கு அடங்காத ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. இவ்வளவுக்கும் காரணம் என்னவென்று அவருக்கு முதலில் விளங்கவில்லே. கூட்டத்தில் கொஞ்சம் இடைவெளி கண்டு அங்கே புகுந்து வேலி ஓரம் நெருங்கி ஆட்டத்தை நோக்கினர். பெரிய மைதானத்தில் சுமார் இருபது பேர் வெவ்வேறு நிறமான உடுப்புகள் அணிந்து நாலாபுறமும் நின்றுகொண்டிருப்பதும் மூன்று சிறு கழிகள் ஒருபுறம்

ஊன்றப்பட்டிருப்பதும் அவைமுன் ஒருவன் நின்று மற்ருெருவன் எறியும் சிறு பந்து ஒன்றை அடிப்பதும் அதைப் பிடிப்பதற்காகப் பாக்கிப் பேர் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து ஓடுவதும் அதற்குள் பந்தடித்தவனும் அவனுக்குக் கொஞ்ச தூரத்தில் இன்னெரு மூன்று கொம்புகளுக்குச் சமீபத்தில் நின்ற இன்னெருவனும் ஒருவனிருக்குமிடமிருந்து இன்னெருவன் இருக்குமிடத்துக்கு ஓடுவதுமாக ஏதோ சேஷ்டைகள் நடந்ததைக் கண்டு, "பூ! இவ்வளவு தானு, நாங்களெல்லாம் அடிச்ச புள்ளையார்ப் பந்து எவ்வளவோ மேலாச்சே!" என்று சொல்லிக்கொண்டே திரும்பி மரத்தடிக்கு வந்தார். பேரனைக் காணும். "பையா, சீனிவாஸா" என்று உறக்கக் கூவினர். 'ஏன், தாத்தா, இதோ இருக்கேன்" என்று தலைக்கு மேலேயிருந்து குறல் வந்தது. அண்ணுந்து பார்த்தார். சீனிவாஸன் ஒரு பெருங்கிளையில் மஞ்சத்தில் அமர்ந்தாப் போல் உல்லாஸமாய் உட்கார்ந்து விளையாட்டைக் கண்குத்திப் பாம்புபோல் கவனித்தும் அதன் நுட்பங்களைப் பக்கத்திலிருக்கும் சுமார் 40 வயதுள்ள மனுஷரோடு ஆராய்ச்சி செய்தும் வருவதைக் கண்டு"இப்படியும் அவிவேகம் உண்டா?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு மரத்தின்மேல் சாய்ந்தார். சற்று நேரத்தில் கண்ணயர்ந்துவிட்டார்.

விளையாட்டு முடிந்தது. ஜனங்கள் செய்த சந்தடியில் கிழவர் விழித்தெழுந்தார். பையனும் கீழே யிறங்கி அவரை அழைத்துக்கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்றுன். அவனுக்குப் பசி ஒரு பக்கம் சாயந்தரக் காக்ஷி சினிமாவில் எப்படியும் தவறக்கூடாது என்ற ஆவல் ஒரு புறம். இவர்கள் மௌண்ட் ரோட்டை அணுகின சமயமும் சினிமாவில் சாயந்தரக் காக்ஷி துவக்கும் சமயமும் ஒத்திருந்தது. "தாத்தா, நீர் சினிமாப் பாத்ததில்லையே!" என்றுன். "அப்படின்ன என்னடா?" என்றவர் கேட்க, "பேசற படம், தாத்தா, ரொம்ப நன்ருயிருக்கும், இதோ இந்தக் கட்டடத்திலே கூட்டமா யிருக்கே, அங்கே தான் நடக்கிறது" என்று சொல்லிவிட்டு, ஒருவேளைப் பணம் என்ருல் 'வீண் சிலவு, வேண்டாம்' என்று சொல்லி விடுவாரோ என்று பயந்து, "எனக்கு அங்கே வேலையாயிருக்கிறவன் ஒருத்தனைத் தெரியும், காசு கொடுக்கவேண்டியதில்லை" என்று சொல்லி அவருக்குப் பதில் சொல்ல அவகாசம் கொடுக்காமல் உள்ளே சென்று இரண்டு ஒன்பதணு டிக்கெட் கைக்காசைக் கொடுத்து வாங்கி, அவரை உள்ளே அழைத்துச் சென்று விசிரி சுழலும் இடத்திற்கு நேர்கீழே ஒரு நாற்காலியில் இருக்கச் செய்து பக்கத்தில் உட்கார்ந்தான்.

உட்கார்ந்து கொஞ்சம் ஆசுவாஸம் செய்துகொண்டு கிழவர் சுற்றுமுற்றும் பார்த்தார். நல்ல கூட்டம். ஆட்டம் ஆரம்பிக்கக் கால்மணி யிருப்பதாயும் தான் அல்பசங்கைக்கு வெளியே போய் வருவதாயும் சொல்லிப் பேரன் தப்பித்துக்கொண்டு காப்பி சாப்பிடப் போய் விட்டான். கிழவர் தனக்கடுத்தாப்போல் உட்கார்ந்திருந்த பேர்வழியைக் கவனித்தார். அவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும்.பக்கத்தில்இரண்டு ஸ்திரீகளும் இரண்டு குழந்தைகளும் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். மாம்பழக் கொடுக்கும் ஐம்பரும் காலிலே ஸ்லிப்பர்ஸூம் அணிந்து முகத்தில் பௌடர், தலையிலே கரடு மண்டினுப்போல் கனகாம்பரம், கையில் தோல் பை இவ்வளவு நாகரிகச் சின்னங்களோடு அம்மாதர்கள் விளங்கினும் பிராமணர்தான் என்று கிழவருக்குப் பட்டது. அதிலிருந்தே தன் பக்கத்திலிருந்த மனுஷ்யனும் அவ்வகுப்பைச் சேர்ந்தவர் என்று ஊகிக்கவேண்டியிருந்தது. முழங்கால் வரையில் சட்டையும் தலையில் தொப்பியும், பிடி மீசையும் அதன் நடுவேயிருந்து அரையடி நீளம் வெளியே நீண்டு கொழுந்துவிட்டு எறியும் கருத்துத் தடித்ததிருச்சினுப்பள்ளிச் சுருட்டும் சேர்ந்து ஒருவிசித்திரக் கோலமாகக் கிழவர் கண்ணுக்குப்பட அவ்வரையே கண்கொட்டாமல் பார்த்தார், கிழவர் இவ்விதம் தன்னை உற்று நோக்

கியதாலேயே அவர் குப்பைக்காட்டு ஆசாமிதான் என்று தீர்மானித்த அந்த மனுஷன் நாற்காலியில் விறைப்பாய்ச் சாய்ந்துகொண்டு, காலைத்தூக்கி எதிரே காலியாயிருந்த நாற்காலியில் போட்டுக் கொண்டு இரண்டு நிமிஷத்திற் கொரு தரம் அரைப் படிப் புகையை வாயாலும் மூக்காலும் கிழவர் பக்கமே பீச்சாங் குழாய் வைத்துப் பீச்சுவதுபோல் பிர யோகித்தார். கிழவருக்கு மூச்சுத் திண றிற்று, குடலைப் பிடுங்கியது நாற்றம். என்ன பண்ணுவதென்று புரியவில்லை. பையனையோ காணேம். அந்த சமயம் சுருட்டுக்காரர் காலைக் கீழே இறக்கவே பக்கத்தில் இருப்பதைவிட முன்னாலே போய் இருந்தால் அவ்வளவு பாதை இருக்காதென்றெண்ணி நெருக்கென்று அந்த நாற்க்காலியில் கிழவர் போய் உட் கார்ந்தார். சிற்றைக்கெல்லாம் பையன் உள்ளே வந்தான், ஆட்டமும் ஆரம்பமா யிற்று.

அது அமெரிக்காவில் தயாரிக்கப் பட்ட படம். சமூக வாழ்க்கையைச் சித் திரித்தது. 'ருசிகரமான' காதல் சம்ப வங்கள் நிறம்பியிருந்தது என்று சொல் லத் தேவையில்லை. அப்படியில்லாவிடில் ஆங்கிலம் தெரியாத அவ்வளவு பேர்கள் காசைக் கொடுத்து வியர்வை நாற்றத்தை யும் இறுக்கத்தையும் சகித்துக்கொண்டு கண்கொட்டாமல் பார்த்தும் ஐந்து நிமி ஷத்திற் கொருதரம் கரகோஷம் செய் தும் ஆனந்திப்பார்களா? கொஞ்ச நாழிகை வரையில் அவர்கள் அவ்விதம் ஆமோதிப்பது என்ன விஷயம் என்று கிழவர் புரிந்துகொள்ள முடியவில்லை. இடுப்புக்கு மேற்பட்ட பாகங்கள் அநேகமாக மறைவுபடாமலும் இடுப் புக்குக் கீழ்ப்பட்ட பாகங்கள் ஏதோ சாஸ்திரத்திற்காகக் கொசுவலை போன்ற துணியால் மறைக்கப்பட்டும் மறைக்கப் படாதவைபோலவே துலங்கக் குதூகல மும் தேகக் கட்டும் ததும்பிய யுவதி கள் பல ரகமான புருஷர்களுடன் கூடி ஆனந்தமாய்க் காலங் கழிப்பதையும் காடாலிங்கனம் செய்துகொள்வதையும், கொஞ்சிக் குலாவுவதையும் விஸ்தரிக்கும் காக்ஷிகளைக் காணும்போதெல்லாம் நாடக சாலையில் கூடிய ஜனங்கள் வெகு அமளியாகக் கைதட்டி சத்தம் போட் டதைக் கவனித்த கிழவர் இவ்விதம் மானம் வெட்கம் இல்லாமல் ஸ்திரீ புரு ஷர்கள் பகிரங்கமாக ஆபாஸ நடவடிக் கைகளை நடத்துவதைக் கண்டு கண்டித் துத் தங்கள் அதிருப்தியையும் வெறுப் பையுந்தான் அவ்விதம் தெரிவித்தார்கள் என்று எண்ணினார். இவ்விதக் காக்ஷிகள் பார்க்கத் தகுதியல்ல, அதுவும் முக்கியமாக நமது மாதர்கள் அவை நடக்கும் பக்கமே திரும்பக்கூடாது என்றெண்ணி அங்கிரு ந்த எல்லோரும் உடனே வெளிப் போந்து விடுவார்கள் என்றே எதிர்பார்த் தார். தானும் வெளியே போகவெண்ணி எழுந்தார். அது ரொம்ப ஸ்வாரஸ்ய மானவிடம். கிழவருக்குப் பின்னுலுட் கார்ந்த சுருட்டுக்காரர் வெகு ஆவலாய்க் கவனித்து வந்த 'கட்டம்' கிழவர் நின்றதால் கண்ணுக்குத் தடைப்படவே, "ஓய், கட்டுப்பொட்டி, ஒக்காரும் கீழே" என்று கிழவரை அதட்டினார். இந்த நாக ரிக வார்த்தைகளைக் கேட்டு அவருடைய பார்யையும் பெண்ணும் இடி இடி என்று சிரித்தார்கள். கிழவருக்கு ஒன்றும் புரிய வில்லை. பொத்தென்று கீழே உட்கார்ந் தார். அந்த மனுஷியன் திமிறைவிட அந்தப் பெண்களின் அலக்ஷியமும் அவ மதிப்புமே அவர் மனதில் தைத்தன. அதனாலேயோ என்னவோ அவர்கள் ஒரு வருக்கொருவர் படத்தைப்பற்றிப் பேசும் வார்த்தைகளை வெகு கூர்மையாகக் கவ னிக்கலானார். அடாடா! என்ன உற்சா கம், 'தெய்வலோகப்பட்டு' என்று கதை யில் சொல்லுவதுபோல் கண்ணுக்குப் புலப்படாத ஆடைகளைக் கண்டு என்ன ஆனந்தம், துப்பாக்கிப் பிரயோகம் செய் வதுபோல் படத்தில் சும்பனங்கள் நடக் கையில் என்ன அடக்க முடியாச் சிரிப்பு! இந்த ஆச்சரியக் காக்ஷிகளில் ஈடுபட்டுப் பரவசமடைந்த விஷயத்தில் தாய் மேலா மகள் மேலா என்றுதான் கிழவருக்கு நிர் ணயிக்க முடியவில்லை.

பாதி ஆட்டமானவுடன் பத்து நிமிஷ அவகாசம். திடீரென்று வெளிச்சம்

நாலாபுறமும் போடப்படவே கிழவர் கூசின கண்களை மூடிக்கொண்டு "பையா, இன்னம் எத்தனை நாழியடா இங்கே ஒக்காந்திருக்கிறது? என்றார். இதைக் கேட்டதும் சிரித்துக்கொண்டு சுருட்டுக்காரர் பெண் "ஏன் தாத்தா, உமக்குப் படம் பிடிக்கல்லியா?" என்றாள். கிழவர் பதில் சொல்லுமுன் ராத்திரிப் பட்டினியும் மத்தியானம் கோவில் பிரஸாதமும் சேர்ந்து உண்டான அஜீரணத்தால் பெருத்த ஏப்பம் வெளிப்பட்டது. இந்த முழக்கத்தைக் கேட்டு பின்னேயிருந்த தாயும் பெண்ணும் மூஞ்சியைச் சுளுக்கிக் கொண்டார்கள். மீசைக்காரரோ சுருட்டைக் கையில் எடுத்துக்கொண்டு "சே! என்ன காட்டுமிராண்டிகள்! பத்துப் பேர் இருக்கிற இடத்தில் ஒழுங்காகப் பழகத் தெரியாதவர்களை இங்கேயெல்லாம் விடலாமா?" என்று கிழவரைக் கடித்து விடுவார்போலச் சொன்னார். அதற்கவர் "பிராமணனாய்ப் பிறந்து எது செய்யலாம் எது செய்யப்படாது என்கிற மரியாதையெல்லாம் கைவிட்டுச் சுருட்டுக் குடிக்கிறது போதாதுன்னு பக்கத்திலிருக்கிறவர்கள் மூஞ்சியில் ஊதுகிறது ரொம்ப நாகரிகம், அஜீரணத்தால் ஏப்பம் வந்தால் அது காட்டுமிராண்டித் தனமோ? மூஞ்சியில் அகப்பை பவுஷைக் காணோமே!" என்று ஓங்கி ஒரு அறை அறைந்து, எழுந்து "அடே, நான் போறேன், இங்கே இருக்க முடியாது" என்று சொல்லி வேகமாய் வெளியே சென்றார். காரியம் மிஞ்சிவிட்டது என்று கண்ட பேரனும் பின்னாலேயே சென்று ஒருவாறு சமாதானப்படுத்தி, பார்க் ஸ்டேஷனுக் கழைத்துச் சென்று ரயிலேற்றிக் கல்லூரியில் மாணவர் விடுதியில் தன் அறைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

மணி சுமார் எட்டிருக்கும். ஐந்து ஆறு பையன்கள் நாற்காலிகள் மேலும் மேஜை மேலும் படுக்கையிலும் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டும் மும்முரமாக வார்த்தைகளைக் கொட்டி அளந்துகொண்டும் இருந்தார்கள். கிழவரைக் கண்டதும் சற்று அரவம் அடங்கிற்றென்றாலும் சீனிவாஸன் 'ரூம் மேட்' டான சுப்பிரமணியன் சீனிவாசனைப் பார்த்து, "நாங்களெல்லாம் சாப்பிட்டாய் விட்டது. நீ சாப்பிட்டு வா. தாத்தாவை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்லக் கிழவரும் ஆமோதித்து ஒரு மூலையில் மடி சஞ்சியை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். சீனிவாஸன் வெளிச் சென்றான். மறுபடிப் பேச்சு வலுத்தது. காசியில் அச்சமயம் நடக்கும் மகா யக்ஞத்தைப் பற்றிப் பலத்த வாதம். இந்த யக்ஞம் நமது ஜனங்களின் பேதமைக்கும் மூடநம்பிக்கைக்கும் தூண்டுகோலாய்ப் பெரிய அநர்த்தத்தை விளைவிக்கக் கூடுமென்றும், அதனால் லோகத்திற்கு க்ஷேமம் ஏற்படும் என்று எண்ணுவது முழு அசட்டுத்தனமென்றும், ஏராளமாகக் கோதுமை முதலிய உணவுப் பொருள்களையும் மற்றைத் திரவியங்களையும் பஞ்சத்தில் அகப்பட்டுப் பல்லாயிரக் கணக்காய் வங்கத்தில் ஜனங்கள் மாளும் இச்சமயம் நெருப்பில் போட்டு வீணடிப்பதுபோன்ற அக்கிருத்தியச் செயலை வேறு எந்தத் தேசத்திலும் அரைக்கணம் கூடப் பொது ஜனங்கள் பொறுக்க மாட்டார்கள் என்றும் ஏகமுகமாக அந்த மகா நாட்டில் தீர்மானமாயிற்று. ஒரு விஷயத்தில்தான் பெரிய அபிப்பிராய பேதம். இந்தப் பொருள்களையெல்லாம் வங்க மக்களின் உதவிக்காகப் பொதுவுடமைக் கக்ஷியார் திரட்டிவந்தப் பஞ்ச நிவாரண நிதிக்கு உதவுவதுதான் ஒழுங்கு என்று அக்கக்ஷியைச் சார்ந்த சில மாணவர்களின் தீவிர வாதம். இதை எதிர்த்து "பொதுஉடமைப் பேர்வழிகள் பஞ்சத்தால் அடிபட்டவர்களுக்காகக் கரையவில்லை. தங்கள் கக்ஷியைப் பலப்படுத்துவதற்காக இப்படியெல்லாம் வேஷம் போடுகிறார்கள்' என்று மற்றும் சிலருடைய கக்ஷி. இதன் நடுவே சுப்பிரமணியன், "ஏன், தாத்தா, உங்களுக் கென்ன தோணுகிறது?" என்று கிழவர் வாயைக் கிண்டினான். அதற்கவர், "கக்ஷிப் பிரதிக் கக்ஷியெல்லாம் எனக்குத் தெரியாது. நான்

எங்கேயோ குப்பைக்காட்டில் கிடக்கிறவன். ஆனால் ஒரு சந்தேகம். யக்ஞம், யாகம் எல்லாம் மூட நம்பிக்கை, வீண் பண்டச் சேதம் என்கிற தத்துவத்தைக் கண்டு பிடிச்சிருக்கிறீர்களே. அது எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது?" என்றார். "குட்டிச்சுவரில் முட்டிக்க வெள்ளெழுத்தா, தாத்தா, நெருப்பிலே நல்ல சாமானைப் போட்டால் சாம்பலாகிறது, வேறு யாருக்குப் பிரீதி? ஏதோ பழஞ்சுவடியிலே எழுதி வெச்சிருக்கு என்று நம்பி இதெல்லாம் இந்த இருபதாம் நூற்றாண்டிலே நாம் செய்வதைப் பார்த்தால் வெள்ளைக்காரர்கள் நாம் முட்டாள்கள் என்றெண்ணி ஏன் நகைக்கமாட்டார்கள்? இப்படி இருந்தால் சுயராஜ்யமாவது வரவாவது!" என்று நவநாகரிக முன்னணியில் நிற்கும் இன்னொரு பையன் வெகு பதட்டமாய்ச் சொன்னான். கிழவர் சிரித்துக்கொண்டு, "அப்பொ, நெருப்பிலே போடறது எல்லாம் வீணாய்ப் போகிறதாக்கும்! சரி, உனக்கு மாசச் செலவுக்கு உன் தகப்பனார் என்ன அனுப்புகிறார்?" "என், சம்பளம், புஸ்தகம் வகையராச் செலவு போக மாசம் ரூ. 50 அனுப்புகிறார், அதுவே போதவில்லை." "ஓஹோ, ரொம்பக் கஷ்டம்தான்போலேயிருக்கு!" என்று சொல்லி தான் இருந்த அறையையும் அதிலுள்ள வசதிகளையும் கவனித்துப் பார்ப்பவர்போல் சுற்றிப் பார்த்துவிட்டு, "ஆமாம், இந்த ரூ. 50ல் சாப்பாட்டுச் சம்பந்தமாய் என்ன செலவழியும்?" என்றார். "இருபது ரூபாய் இரண்டு வேளை சாப்பாட்டுக்கு, அதைத் தவிர தினம் எட்டணாவாவது ஆகும் டிபனுக்கு." "ஆமாம், இப்பொவும் அந்த திட்டம்தானே, ஏதாவது குறைவுண்டோ?" "இதென்ன, தாத்தா, வேடிக்கையாயிருக்கே நீங்கள் கேட்கிறது! இந்த எட்டணாக்கூடப் போதுவதில்லை, மூன்று தரமாவது காப்பி சாப்பிடாமல் போனால் சரிப்படுகிறதா?" "ஓஹோ, வங்கத்திலே பஞ்சம் தாண்டவமாடினால் அதுக்காக நம்ப காப்பிச் செலவைக் குறைக்க முடியுமா என்ன?" என்று சொல்லிச் சிரித்தார். மேலும், "யக்ஞத்திலே நெருப்பில் சாமானைக் கொட்டுவது வியர்த்தம் என்றீர்களே. இப்படி நம்முடைய வயிற்று நெருப்பை அணைக்க ஒரு வேளைக்கு மூன்று வேளையாகக் கொட்டலாமா? அது போகட்டும். வெள்ளைக்காரர்கள் பார்த்து நகைக்கிறதாகச் சொன்னீர்களே. இப்பொழுது அவர்கள் நடத்திவரும் மகா யுத்தம் நடக்காமலிருந்திருந்தால் எத்தனை பணச்செலவு, பண்டச்சேதம், ஜனச்சேதம், துக்கம், கஷ்டம் இதெல்லாம் நேராமலிருந்திருக்கும்? இந்த யோசனை அவர்களில் மேதாவிகளுக்குப் படாமலா இருந்திருக்கும்? ஏதோ தர்மஸ்தாபனார்த்தம் இச்சண்டையைப் போட்டே ஆக வேண்டியிருக்கிறது என்றல்லவா அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்? 'இப்படியே சொல்லி இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் ஒரு யுத்தம் நடத்தினோமே, உலகம் என்ன பலனைக் கண்டது?' என்று அவர்களிலேயே சிலர் விவாதித்தும் அந்த ஆக்ஷேபங்களை அதிகார வர்க்கத்தார் பொருட்படுத்தவில்லையே. அக்கிரமத்தையும் அக்கிரமக் காரர்களையும் சண்டையிட்டே களையவேணும் என்பது மேல்நாட்டார் கொள்கை; வேதத்தில் நம்பிக்கையுள்ள நமக்கு அதர்மத்தை ஈசுவரன் சகாயத்தைக் கொண்டே வெல்லவேணும், அதற்கு யக்ஞயாகாதிகள் ஒருமார்க்கம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மேல்நாட்டார் நம்பிக்கை மெய்யென்றும் நமது நம்பிக்கை மூடத்தனம் என்றும் நீங்கள் எப்படி ஸித்தாந்தம் பண்ணினீர்களோ?"

"ஏ அப்பா, தாத்தா பொல்லாதவர்டா, அவரோடே பேசி நம்மாலே ஜெயிக்க முடியாது" என்று சிரித்துக்கொண்டே சொல்லிக் கைகொட்டிச் சுப்பிரமணியனைத் தவிர மற்றெல்லோரும் எழுந்து போய்விட்டார்கள். கிழவர் சுப்பிரமணியனைப் பார்த்து, "உங்கள் சாப்பாட்டு இடம் எங்கே? நான் கால் கை அலம்பிக்கொண்டு ஸந்தியா வந்தனம் பண்ணவேணும். ரொம்ப அகாலமாகி

விட்டது" என்றார். அவன், "நீங்கள் இங்கேயே யிருங்கள், நான் ஜலம் கொண்டுவந்து தருகிறேன்" என்று சொல்லி எழுந்தான். "வேண்டாம், வேண்டாம், நான்போய் எடுத்துக் கொள்ளுகிறேன். எனக்கு வழியை மட்டும் காட்டு" என்றதற்கு, "என்ன தாத்தா, ஸ்மார்த்தன் தொடப்படாதோ?" என்று வேடிக்கையாய்ப் பதிலளித்துவிட்டு, பின்னும் "அங்கே யெல்லாம் ஒண்ணடி மண்ணடியா யிருக்கும். உங்களுக்குப் பிடிக்காது" என்று சற்றுக் கவலை தொனிக்கும் குரலில் சொன்னான். கிழவர் விடுவதாயில்லை; சாப்பிடும் இடத்தை உடனே பார்த்தாக வேண்டும் என்ற வேகம் பிறந்தாப் போல், "நீ வருவாயா? இல்லே, நானே போய் பார்த்துக் கொள்ளட்டுமா?" என்றார். சுப்பிரமணியன் பதில் சொல்லாமல் வழிகாட்டிச் சென்றான். போஜன விடுதிவாயிலை அடைந்தார்கள். உள்ளே ஒரே வெளிச்சம், ஒரே சத்தம், பெரிய ஜன்னல் ஒன்றின் பக்கத்தில் நின்று கிழவர் உட்புறம் உற்றுநோக்கினர். வரிசையாகச் சின்னச் சின்ன மேஜைகள். அவைகள்மேல் இலைகளிலும் பீங்கான் தட்டுகளிலும் பலவித ஆகாரத்தை ஒட்டுச் சல்லடமும் முழங்கை வரையில் சட்டையும் அணிந்த பரிசாரகர்கள் பரிமாறிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பூணூலிருக்கிறதா என்று கண்டுபிடிக்க முடியாமற் போனாலும் மூஞ்சியைப் பார்த்தால் நிச்சயமாய்ப் பிராம்மணரல்ல என்று தீர்மானித்த கிழவர் அவர்கள் தட்டுத்தட்டாய் சாப்பிடுவோர் முன் கொணர்ந்து நீட்டுவதையும் அதிலிருந்து ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய பதார்த்தத்தை வேண்டிய அளவு தன் கையிலுள்ள எச்சில் ஸ்பூனாலோ, கத்தியாலோ, குத்தி எடுத்துக்கொள்ளுவதையும், பையன்கள் ஒருவனுக்கொருவன் வேடிக்கையாகத் தன் இலையில் உள்ள சாமானை மற்றவன் இலையில் போடுவதையும், சிற்றைக்கொருதரம், "அடேய், மரக்கறி, புலாவ் என்ன ஷோக்காய் இருக்கு தெரியுமா? இந்தக் கட்லெட் ஒண்ணு சாப்பிடேன், உன்னைப் புடிச்ச வியாதியெல்லாம் பறந்து போயிடும்" என்ற விபரீதமான வார்த்தைகள் கிளம்புவதையும் கவனித்துச் சுப்பிரமணியனைப் பார்த்து, "ஏண்டாப்பா, பிராம்மணாளும் பாக்கிப்பேரும் சேர்ந்து சாப்பிடறதோடு இல்லே, எல்லாரும் எல்லாவித ஆகாரமும் சாப்பிடுகிறாப்போலிருக்கே!" என்று மனக் கவலையில் ஆழ்ந்த குரலில் கேட்டார். "சேச்சே! அதெல்லாம் இல்லே தாத்தா, மாம்ஸம் சாப்பிடுகிறவர்கள் எல்லாரும் ஒரு பக்கமும் சைவச் சாப்பாட்டுப் பேர் வழிகள் ஒரு பக்கமுமாகத்தான் ஹாலிலே வெச்சிருக்கு, நடுவிலே முழ உயரம் ஒருமறைவுகூடப் போட்டிருக்குப் பாருங்கோ" என்று அவன் சொல்லவே கிழவர் தாங்கமுடியாத சிரிப்பு ஒருபுறமும் துக்கம் ஒருபுறமுமாய் என்ன சொல்லுவதென்று தெரியாமல் மௌனமானார். அந்தச் சமயம் சீனிவாஸன் போஜனம் முடித்து வாயில் பீடா அடக்கி வெளியில் வரக் கிழவரைக் கண்டு திடுக்கிட்டான். சுப்பிரமணியன் முகத்தைப் பார்த்ததும் விஷயம் விளங்கிற்று. பேசாமலிருக்கப் படாதா? "ஏன், தாத்தா, ரூமிலேயே பேசாமல் படுத்துக்கப் படாதோ?" என்றான். "ஏண்டா! உன் யோக்கிதை வெளியாயிட்டுதேன்னு கஷ்டமா யிருக்கோ?" என்று வெகு அருவருப்பாய்க் கிழவர் பதில் சொல்லவே சீனிவாஸன் அன்றை முழுவதும் தான் அவரால் அடைந்த துன்பத்தை நினைத்துக் கோபம் தலைக்கு மீறவே நாம் என்ன சொல்லுகிறோமென்று கூட யோசிக்காமல், "என் யோக்கியதை யென்ன, எல்லார் யோக்கிதையும் அதுக்கு மேலேதான் இருக்கும். ஏன், இவ்வளவு கொந்தல் கொந்துகிறீரே, உம்ம பேரன் ராணுவத்தில் தினம் பூஜை வைசுதேவம் பண்ணி சாத்வீக ஆகாரம்தான் நடத்துகிறானோ? அவன் சாப்பிடுகிற இடத்திலே, கரிகாய் தபசு பண்ணினக்கூடக் கிடைக்காது; முழு ஆடுன்னா ஒவ்வொத்தனுக்கும் உள்ளே போகிறது!" என்றான்.

"நாராயண, நாராயண !" என்று கிழவர் காதைப் பொத்திக்கொண்டு, "அடே காமாட்டி, உன்னைப்பத்திக் கேட்டால் இல்லாதவனைப்பத்தி வாயில் வந்தபடி பிதத்துகிறாயே. நேர் நேராகன்ன கேட்டுத் தெரியணும்? அதிருக்கட்டும், நீ கெட்டுப்போனது மன்னியில் குலத்தைக் கெடுத்துவிட்டாயே. லீவுக்கு இரண்டு மாசம் ஊருக்கு வந்து, பதிதப் பயலே, உன் எச்சில், தீட்டு, அநாசாரம் எல்லாத்தையும் வீட்டில் வேறே சேர்த்துவிட்டாயே. வீடு முழுக்கச் சாணத்தைக் கரைத்துக் கொட்டினாலும் போகாது போலிருக்கே!" என்று ஆத்திரமாகச் சொல்லப் பேரப்பிள்ளை சிரித்துக் கொண்டு, "அதற்கு என்பேரில் பாய்ந்து என்ன பண்ணறது ? உம்ம பிள்ளையைக் கேளும். இந்தப் பள்ளிக்கூடத்திலே சேரும்போது இங்கே இப்படியெல்லாம் இருப்பதைப் பார்த்து, 'நான் வேறு பள்ளிக்கூடம் சேர்ந்து ஹோட்டலிலே சாப்பிடுகிறேன்' என்று சொன்னேன். அப்பாதான், 'அதெல்லாம் பார்த்தால் இந்தக்காலத்திலே முடியுமா ? இங்கே படிப்பு நன்னயிருக்கு என்று சொல்லுகிறார்கள். இங்கேயே சேர். பின்னாலே வேணுமானால் பிராயச்சித்தம் பண்ணி விட்டால் போறது'ன்னு சொன்னர் " என்றான். கிழவர் தலையில் அடித்துக் கொண்டு, "எந்தப் பிராயச்சித்தத்தைப் பண்ணறது ! உடம்பை நெருப்பிலே தான் போடணும்" என்று சொல்லிக் கொண்டு விர்ரென்று சீனிவாஸன் அறையில் போய் ஒருபுறமாய் ஒடுங்கினார்.

காலையில் ஐந்து மணிக்கே எழுந்து பல்லுக்கூடத்தேய்க்காமல் ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்குக் கிளம்பினார். சீனிவாஸனும் வாயைத் திறவாமல் அவரை அழைத்துச் சென்றான். எட்டு மணிக்கு ரயில் வந்தது. கிழவர் கூட்டத்தைக் கண்டு பயந்து ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார். ஒரு முதல் வகுப்பு வண்டியிலிருந்து, வாயில் நீண்ட தந்தப் பிடியில் செருகிய சிகரெட்டும், தலையில் கோணக் குல்லாயும் கழுக்கட்டையில் வெள்ளிக் கொண்டைப் பிரம்பும், ராணுவ உடுப்புமாகப் பேரன் வேணுகோபாலன் தொப்பென்று குதித்து வண்டியில் இருந்த இருபது வயதுள்ள ஐரோப்பிய மாது ஒருத்தியைக் கையைப் பிடித்து இறக்கி வெகு சுவாதீனமாகத் தோளில் கையைப் போட்டுக்கொண்டு ஐந்து நிமிஷம் அந்தரங்கமாகப் பேசிப்பிறகு அவளுக்கு ஒரு மோட்டார் வாடகை வண்டி அமர்த்தி அதில் அவளைஏற்றிஅனுப்பிவிட்டுச் சாவகாசமாகத் தன்னை யாராவது பார்க்கவந்திருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ளச் சுற்றுமுற்றும் பார்த்தான். சீனிவாஸன் கொஞ்சம் வெட்கித் தனித்து நிற்பதைக் கண்டு, "ஹல்லோ, சீனு, எங்கே கிழம், வந்திருக்கா?" என்று மரியாதையாய் விசாரித்து அவன் கையைப் பிடித்துக் குலுக்கினான். சீனு பதில் சொல்லாமல் கிழவர் நிற்குமிடத்தைக் காட்டினான். வேணுகோபாலன் தாத்தாவைப் பார்த்து ஏதோ சொல்ல ஆரம்பித்தவன் அவர் தீப்பறக்கும் கண்களையும் முகவாட்டத்தையும் கண்டு சற்று ஏமாந்தவன்போல் சும்மாயிருக்கக் கிழவர் சீனுவைப் பார்த்து, "அப்பா, வந்த காரியம் ஆயிடுத்து. இப்பொவே ஊருக்குப் போகிற ரயில் ஒண்ணு கிளம்புகிறதாம்,என்னை அதில்ஏத்திவிடு" என்று சொல்ல, வேணுகோபாலன், 'வாட் எ டாம்ட் ந்யூஸென்ஸ் !' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு, "என்ன தாத்தா, சாயந்தர ரயிலுக்குப் போனப் போச்சு, நானும் சாயந்தரம் கிளம்பணும்" என்று குறுக்கிட்டான். கிழவர் நிதானமாக "தாத்தாவுமாச்சு, கீத்தாவுமாச்சு, உறவு கொண்டாடினதெல்லாம் போதும். சுவாமி புண்ணியத்திலே எங்கேயாவது நன்னயிருந்தால் சரிதான்" என்று பதில் சொல்லிவிட்டு மடிஸஞ்சியைத்தூக்கித்தலையில்வைத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வெளியே சென்றார். சீனிவாஸனும் அத்தானிடம் சமிக்ஞையாக விடைபெற்று அவசரமாய்க் கிழவர் பின் சென்றான். இவ்விதம் புதுமையைக் கண்டு பழமை தோல்வியுற்றது.

# அப்பரின் உபதேச மும்மணிகள்

[பி. ஸ்ரீ.]

## 1

### விசேஷமான விவசாயம்

ஒரு சமயம் அப்பர் சுவாமிகள் சில விவசாயிகளைச் சந்தித்தார். "எங்களுக்கு ஏதாவது உபதேசஞ் செய்யவேணும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர் தாமும் ஒரு விவசாயம் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார். "அது எப்படிப்பட்ட விவசாயமோ?" என்றே அவர்கள் ஆவலாக அறிந்து கொள்ள விரும்பினார்கள்.

சுவாமிகள், "நானும் உங்களைப்போல் உழுகிறேன்; விதைக்கிறேன்; களை பிடுங்குகிறேன்; அவசியமான காலத்தில் தண்ணீர் பாய்ச்சுகிறேன். என்னுடைய நிலத்தைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன். பட்டி மாடுகள் விழுந்து பயிரை அழித்துவிடாதபடி வேலி யிட்டுக் காவல் செய்கிறேன். நானும் உங்களைப்போல் அறுவடை செய்கிறேன். உங்கள் விவசாயத்தைப்போல் என்னுடைய விவசாயமும் உலகத்திற்கு மிகவும் அவசியமானது" என்று சொன்னார்.

அவர்கள் ஆச்சரியமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுவாமிகள் பாட ஆரம்பித்தார் :—

மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பெனும் வித்தை வித்திப்,
பொய்ம்மையாம் களையை வாங்கிப்,
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்,
தம்மையும் நோக்கிக், கண்டு,
தகவெனும் வெலி யிட்டுச்,
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே

[வித்தி-விதைத்து. பொறை-பொறுமை. தகவு - தகுதி ; ஒழுக்கம்.]

மனமெய் மொழிகளில் உண்மையாக வாழ்வதுதான் இந்த விவசாயத்திற்கு உழவு செய்வது. உண்மையாகிய உழவைச் செய்து, விருப்பம் என்கிற விதையை விதைக்க வேண்டுமாம். ஆம் : நல்ல விருப்பம்—உயர்ந்த விருப்பம்—என்ற விதையை விதைத்தால், அது நல்ல, உயர்ந்த, பயன் தராமல் போகுமா?

ஆனால் இந்த விதை முளைத்துப் பயிராவதற்குப் பொய்யாகிய களையைப்பிடுங்கி எறிய வேண்டும்; பொறுமை யென்ற நீரைப் பாய்ச்சவேண்டும்.

விவசாயி அடிக்கடி பயிரைப் பார்ப்பதுபோல், 'தம்மையும் நோக்கிக்கண்டு' மேல் நிலை அடையவேண்டுமாம். தம்மைத் தொண்டராகவும் தொண்டருக்குத் தொண்டராகவும் நோக்கவேண்டும்—என்பது குறிப்பு. அப்படி நோக்கும்போது, 'நாம் ஆர்க்கும் குடி அல்லோம்' என்ற அபாரமான தன்னம்பிக்கை ஏற்படுமாம். தம்மை நோக்குவது தன்னம்பிக்கை; தம்மைக் காண்பது தன்னறிவு; தன்னம்பிக்கை தன்னறிவுகளோடு, 'தகவு எனும் வேலியிட்டு'க் காப்பாற்றும் தன்னடக்கமும் உயர்தர வாழ்க்கை என்ற பயிர்த்தொழிலுக்கு இன்றியமையாதது. இத்தகைய வாழ்க்கையின்

விளைவு அல்லது அறுவடை தான் சிவகதி என்கிறார் அப்பர்.

இங்கிலீஷில் ‘ கல்ச்சர் ’ (Culture) என்று சொல்லுகிறோமே, அந்த மனப் பண்பு உண்மையில் எப்படி அமைய வேண்டும் என்பதைத்தான் இந்த விவ சாயப் பாட்டு அற்புதமாய்க் குறிப்பிடு கிறது.

## 2

## ‘ நாம் ஆர்க்கும் குடி அல்லோம்!’

கட்டளையைத் தெரிவிக்கிறார் மந்திரி. “ கீழ்ப்படிய வேண்டாமா? எப்படிப் பட்ட தெய்வபக்தி யுள்ளவரானாலும் அரசருக்குக் குடியென்ற முறையில் ஆஜராக வேண்டியதுதானே !”

“ நாம் ஒருவருக்கும் பிரஜையில்லை ! எங்களுக்குச் சிவபெருமானே ராஜா, வேறு ராஜாக்களை ஒப்புக்கொள்வ தில்லை !”

“ ஐயா ! ராஜ பக்தியில்லாவிட்டாலும் ராஜ பயமாவது வேண்டாமா ?”

“ பயமா ? என்ன ? எமராஜாவே ‘வா’ என்று உத்தரவு போட்டாலும், ‘வர மாட்டோம்!’ என்று சொல்லும் சக்தி வாய்ந்தவர்கள் சிவனடியார்கள். நமனுக் கும் அஞ்சாத நாங்கள், உங்கள் அரச னுக்கும் அரசாங்கத்திற்குமா அஞ்சப் போகிறோம் ?”

“ ஐயோ ! தண்டிப்பாரே.”

“ நரகத்தில் இடப்பட்டாலும் நாங் கள் இடர்ப்படமாட்டோம், நடுங்கவும் மாட்டோம் !”

“ ராஜ தண்டனையில் அவமதிப்பும் உண்டல்லவா ?”

“ அதுவும் பெருமைதான் எங்க ளுக்கு !”

மந்திரி மேலும் மேலும் பேசிக் கொண்டே போகிறார். சிவனடியாரோ, “ பிணி அறியோம் ; பணிவோம் அல் லோம் ; இன்பமே எந்நாளும் ; துன்பம் இல்லை !” என்று பாடிக்கொண்டே போகிறார்.

இப்போது பாட்டு முழுவதையும் கேளுங்கள்.

நாமார்க்கும் குடிஅல்லோம் !
நமனை அஞ்சோம் !
நரகத்தில் இடர்ப்படோம் !
நடலை இல்லோம் !
ஏமாப்போம் ; பிணிஅறியோம் ;
பணிவோம் அல்லோம் !
இன்பமே எந்நாளும் ;
துன்பம் இல்லை ;
தாமார்க்கும் குடியல்லாத்
தன்மை யான
சங்கரன்,நற் சங்கவெண்
குழைஓர் காதில்
கோமாற்கே, நாம்என்றும்
மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே
குறுகி னோமே.

[இடர்ப்படோம் - துன்பப்பட மாட டோம். நடலை - வஞ்சனை ; நடுக்கம். ஏமாப் போம் - பெருமை கொள்வோம். குழை - ஒருவகையான குண்டலம். கோமாற்கே - கோமானுக்கே ; (அதாவது) ராஜாவுக்கு. மீளா - மீளாத ; திரும்பாத. கொய்ம் மலர்ச் சேவடி - கொய்து கொள்ளத் தக்க மலர்களைப் போன்ற திருவடி. இணை - இரட்டை - குறுகினோம் - நெருங்கினோம்.]

‘ அடியார் ’ என்ற இந்தப் பெரு மைக்கு முன், அரசர்கள், சக்ரவர்த்திக ளுடைய மாட்சிமை யெல்லாம் கூசிக் குலைந்து போக வேண்டியதுதான் ! கட வுளை நம்புகிறவர்கள் எந்த நிலையிலும் நோவுபடக் காரணமே யில்லையாம். அவர்களுக்கு நோய்கூட வருவதில்லை யாம். வணங்கா முடித் தனி யரசர்களை யும் வணங்காத முடியர்களாம் அடியார் கள்.

## 3

## பிறவியும் வேண்டியதே

"'பிறவி வேண்டாம், வேண்டாம்; வேண்டவே வேண்டாம்' என்றெல்லாம் அடியார்கள் கதறுகிறார்கள்; அலறுகிறார்கள். இது மறுலோக மனப்பான்மை" யென்று சிரிக்கிறார்கள் அன்னியர்கள்.

"கீழே பாராமல் வானம் பார்த்து நடப்பவன் சரியாக நடக்க முடியுமா? முள்ளை முறித்துக் கல்லிலே இடறி விழ மாட்டானா? ஒரு சமயத்தில் ஒரு காரியம் தான் பார்க்கலாம்; ஒரு உலகத்தைத் தான் பார்க்கலாம். இந்த உலகத்தில் வாழ விரும்புகிறவர்கள் இந்த உலகத்தைத்தான் பார்த்து நடக்கவேணும்" என்றெல்லாம் உபதேசிக்கிறார்கள்.

இந்த உபதேசிகள் "மனிதப் பிறவியும் வேண்டுவதுதான்!" என்று உபதேசிக்கும் அப்பர் சுவாமிகளின் அருள்மொழியைக் கேட்டால், என்ன சொல்லப் போகிறார்களோ?

**மனிதப் பிறவி** வேண்டியதுதான். எதற்காக? **மனிதன்மேல் மனிதன்** குண்டு போடுவதற்காக அல்ல. விண்ணைப் பிளக்க வேதாந்தம் பேசிவிட்டு, மண்ணிலே புழுவைப்போல ஊர்ந்து ஊர்ந்து வாழ்வதற்கும் அல்ல. பக்தி பண்ணிக்கொண்டு பெரு வாழ்வு வாழ்வதற்காக வேமனித வாழ்வு வேண்டும்—என்கிறார் தேவார ஆசிரியர்.

**மனிதப் பிறவி வேண்டும்**: சிதம்பரம் போய் நடராஜ தரிசனம் செய்யலாமல்லவா? நாமும்தான் போகிறோம் சிதம்பரத்திற்கு; கோவிலுக்கும்தான் போகிறோம். ஆனால் நம்மைப் போலவா தரிசெய்தார் அந்தச் சிவநேசச் செல்வர்?

குனித்த புருவமும், கொவ்வைச்செவ்
வாயில் குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்,
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே!

[குனித்த - வளைத்த. கொவ்வை - கொவ்வைப் பழம். குமிண் சிரிப்பு - புன்சிரிப்பு. பனித்த - நடுங்கச் செய்யும். இனித்த முடைய - இனிமையுடைய.]

அந்தப் புருவமும் புன்சிரிப்பும், அந்தத் திருமேனியும், அசுர சக்திகளை நடுங்கச் செய்யும் அந்த ஜடையும், நல்லவர்களுக்கும் நம்பினவர்களுக்கும் அருள் செய்யத் தூக்கிய அந்தப் பாதமும், நடராஜ விக்கிரகத்தின் மூலமாகக் காணும் பாக்கியம் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் அல்லவா மனிதப் பிறவி?—என்கிறார் அப்பர். இப்படிப்பட்ட நடராஜ தரிசனத்தால், 'உலகமே அவருடைய நாடகம் தான்!' என்று கண்டு ஒழுங்காக வாழ்க்கை நடத்தி இவ்வுலகிலேயே பேரின்பப் பெருவாழ்வு வாழலாம் என்பது கருத்து.

# இந்தியாவின் துறைமுகங்கள்

[ஏ. டி. கிருஷ்ணமாசாரி, பி. ஏ., பி. எல்.]

[ஆசியாக் கண்டத்தின் தென் பாகத்தில் பதக்கங்கள் கோத்துத் தொங்கவிட்டாற்போல் அராபியா, இந்தியா, மலாயா என்னும் மூன்று நாடுகள் இருக்கின்றன. இவற்றுள் நடுநாயகமாய் விளங்குவது இந்தியா. இது இந்துமகா சமுத்திரத்தின் நடுவில் அமைந்திருக்கிறது. இதனால் கிழக்கேயும் மேற்கேயும் கடல் கடந்து அயல் நாடுகளோடு வியாபாரம் செய்வதற்கு அநுகூலமாகும். என்றாலும் இந்நாட்டின் கடற்கரை இயற்கை அமைப்பு இக்காலத்தில் வர்த்தகம் செய்யும் பெரிய பெரிய கப்பல்களுக்கு வசதி அளிக்கக்கூடிய துறைமுகங்கள் அமைக்க வழியில்லாமல் செய்கிறது. மேற்குக் கரையிலே பலூசிஸ்தானத்திலிருந்து கன்யாகுமரி வரையில் உள்ள துறைமுகங்களில் கராச்சி, பம்பாய், கொச்சி தவிர மற்றவை அனைத்தும் ஆறுமாச காலம் மூடிக் கிடக்கின்றன. வைகாசிமீ முதல் ஐப்பசிமீ முடிய (மேமீ முதல் அக்டோபர் வரை) மேற்குக் கடற்கரையிலே புயலடிக்கும்; மழை கொட்டும்; கடல் கொந்தளித்தால் கப்பல்கள் ஆடும். சிறு துறைமுகங்களில் கப்பல்கள் தங்க வசதியில்லை. கிழக்குக் கடற்கரையோ வென்றால், கன்யாகுமரி முதல் கல்கத்தா வரையில் நீண்டிருந்தாலும், கடல் (அலைகளால்) சதா மணலைத் துருவித் துருவிக் கொண்டு வந்து துறைமுகங்களில் குவிக்கின்றது. ஒரு துறைமுகமாவது இயற்கையாய் அமையவில்லை. சென்னையும் விசாகப்பட்டினமும் தான் சற்றுக் கப்பல்களுக்குப் பாதுகாப்புடன் தங்க வசதி அளிக்கின்றன. கல்கத்தாவோ, கங்கைக் கரையிலே யிருந்தபோதிலும், கடலிலிருந்து உள்ளே போகிற வழியிலே அடிக்கடி மணல் மேடிட்டுப்போகிறபடியால் அத்தனை அநுகூலமாக இல்லை. இத்தனை தொல்லைகளையும் சமாளித்துக் கொண்டு கப்பல் வர்த்தகம் பிழைக்க வேண்டியிருக்கிறது. இதனால் என்ன ஆகிறதென்றால் நாட்டில் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி எல்லாம் பல துறைமுகங்களில் பகிர்ந்து போகாமல் மூக்கால்வாசிக்குமேல் கல்கத்தா, பம்பாய், கராச்சி, சென்னை, கொச்சி, விசாகப்பட்டினம் ஆகிய ஆறு துறைமுகங்களிலே நடக்கிறது. இவற்றுள் பம்பாயும் கராச்சியும் கொச்சியும் இயற்கையாயமைந்த துறைமுகங்கள். இவற்றுள் பெரிய துறைமுகங்களாகிய கல்கத்தா, பம்பாய், கராச்சி, சென்னை, சிட்டகாங் ஆகியவற்றை போர்ட் டிரஸ்டு என்கிற போர்ட் கமிஷனர்கள் (துறைமுக பரிபாலன சபையார்) வசம் ஒப்புவித்திருக்கிறார்கள். இந்தச் சபைகளில் அங்கம் வகிப்பவர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சிலர் நியமிக்கப்பட்டவர்கள். மாகாண அரசாங்கத்துக்காவது மத்திய அரசாங்கத்துக்காவது கட்டுப்பட்டு இவர்கள் அநேக அதிகாரங்களைச் செலுத்துகிறார்கள். சட்டப்படி இவர்கள் சில வரிகளை விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இந்த வரி சுங்கம் அல்ல. இதற்குத் துறைமுகத்தீர்வை என்று பேர். இறக்குமதி செய்கிற சாமான்கள் பேரிலும் ஏற்றுமதி செய்கிற சாமான்கள் பேரிலும் இந்தத் தீர்வைகளைப் போட்டு வசூலாக்கி அதைக் கொண்டு துறைமுகத்தில் ஜனங்களுக்கு (கப்பல்களுக்கும் வர்த்தகர்களுக்கும்) தேவையானவைகளை மேன்மேலும் செய்து கொடுக்கிறார்கள். துறைமுகத்தின் அபிவிருத்திக்கே அப்பணத்தைச் செலவிடுகிறார்கள்.

இனி கராச்சி முதல் பம்பாய் வழியாக கன்யாகுமரி முனையைச் சுற்றிக் கல்கத்தா சிட்டகாங் வரையில் உள்ள எல்லாத் துறைமுகங்களையும்பற்றி விவரமாகக் கவனிப்போம்].

## I கராச்சி

ஸிந்து மாகாணத்தில் உள்ள கராச்சி துறைமுகம்தான் ஐரோப்பாவுக்கு மிக சமீபமான இந்தியத் துறைமுகம். சுமார் நூற்றைம்பது வருஷமாய் ஸிந்து மாகாணத்துக்கு மாத்திரமல்ல, வடமேற்கிந்தியா, பலூசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் ஆகிய பிராந்தியங்களுக்கெல்லாம் கராச்சிதான் வெளிநாட்டு வர்த்தகத்துக்குப் பிரதான வழியாக இருந்து வந்திருக்கிறது. நூறு வருஷங்களுக்கு முன்னே, 1843ம் வருஷத்தில் பிரிட்டிஷார் சிந்து மாகாணத்தைக் கைப்பற்றிய போது, இந்தக் கராச்சி துறைமுகத்தில் நடந்த வர்த்தகம் வருஷம் பத்து லக்ஷம் ரூபாய்க்கு மேலில்லை. 1863ம் வருஷத்துக்குள் இத்துறையின் வர்த்தகம் ஆறு கோடி ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது. இதற்கு ஒரு விசேஷ காரணம் அமெரிக்காவில் அப்போது நடந்த யுத்தத்தினால் இந்தியப் பருத்திக்கு வெளிநாடுகளில் அமோகமான கிராக்கி ஏற்பட்டது தான். 1878ம் வருஷம் கராச்சியிலிருந்து பஞ்சாப்புக்கு இருப்புப்பாதை போட்ட பிற்பாடுதான் மறுபடியும் அத்தனை உயர்ந்த வர்த்தகம் நடைபெற்றது.

கராச்சியில் பெரிய ரயில்வே ஒர்க்ஷாப்புகளும், நல்ல நவீன மாவு ஆலைகளும் மூக்குக் கண்ணடி தயாரிக்கும் பட்டறையும், கார்பன் பேபர் ரிப்பன் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இருந்தாலும் காராச்சியை ஒரு கைத்தொழில் நகரம் என்று சொல்லிவிட முடியாது. வடமேற்கு இந்தியாவுக்கு முக்கிய விற்பனை ஸ்தலம் என்றும் அந்தப் பிராந்தியத்தில் உற்பத்தியாகும் மூலப் பொருள்களுக்கு முக்கியமான ஏற்றுமதித் துறை என்றும், வெளி நாட்டுச் சரக்குகளுக்கு அப்பிராந்தியத்தில் இறக்குமதிக்கும் இருப்புகட்டி வைப்பதற்கும் ஏற்ற துறைமுகம் என்றும் கராச்சிக்குக் கௌரவம். ஏற்றுமதியாகும் பண்டங்களில் முக்கியமானவை கோதுமை, பருத்தி, பார்லி, அரிசி, பருப்பு, (கடலை) எண்ணெய், வித்துக்கள், கம்பளி, தோல், கால்நடைகளின் எலும்பு வகையறுக்கள் முதலியன. இறக்குமதியாகிற பண்டங்களில் முக்கியமானவை நூல், உலன் ஜவுளி, சர்க்கரை, இயந்திரங்கள், இரும்பு, எஃகு, மண் எண்ணெய், (வடமேற்கு இருப்புப்பாதைக்குத் தேவையான) நிலக்கரியும் கட்டையும் தான். இப்போது இந்தியாவில் உள்ள கடற்படை தளங்களுக்குள்ளே மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கிறது கராச்சி.

1929ஆ இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் விமானத்தபால் ஏற்படுத்தினதிலிருந்து இந்தியாவுக்குப் பிரதான விமானத் துறைமுகம் கராச்சிதான். சர்க்கார் விமான இலாகாவின் பிரதான விமான நிலைய அதிகாரிக்குக் கராச்சியில்தான் தலைமைக் காரியாலயம். இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு நிரந்தரமாய் விமானப் போக்குவரத்து நடத்தும் கம்பெனிகள் :—

(1) பிரிட்டிஷ் இம்பீரியல் ஏர்வேஸ் லிமிடெட்.

(2) பிரெஞ்சு ஏர்பிரான்ஸ்.

(3) டச்சு. கே. எல். எம்.

இம்பீரியல் ஏர்வேஸ் லிமிடெட் வாரத்துக்கு இரண்டு விசை இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் விமானம் விடுகிறார்கள். கராய்ச்சியும் கிராய்டனும் இதற்கு இரு கோடியிலுள்ள விமான நிலையங்கள். இண்டியன் டிரான்ஸ் - காண்டினெண்டல் ஏர்வேஸ் கம்பெனியோடு தொடர்பு கொண்டு இந்தக் கம்பெனியார் கல்கத்தாவுக்கும், ரங்கூன் வழியாய் சிங்கப்பூருக்கும் அங்கிருந்து (ஆஸ்திரேலியாவிலுள்ள) பிரிஸ்பேனுக்கும்கூட இதை விடுகிறார்கள்.

ஏர் பிரான்ஸ் கம்பெனியார் பிரான்ஸிலிருந்து பிரெஞ்சு கொச்சின் சீனாவுக்கு விமானம் விடுகிறார்கள். மார்ஸேல்ஸும் சைகோனும் இதற்கு விமானக்கோடி நிலையங்கள்.

கே. எல். எம். கம்பெனி உலாந்தாவி லிருந்து ஜவாவுக்கு வாரம் இருமுறை விமானம் விடுகிறார்கள். இதற்கு ஆம்ஸ்டர்டாமும் படேவியாவும் கோடி நிலையங்கள்.

மேற்கூறிய விதேச விமானப் போக்கு வரத்து தவிர கராச்சியிலிருந்து சென்னைக்கும் கராய்ச்சியிலிருந்து லாகூருக்கும், டாடா லிமிடெட், இண்டியன் நேஷனல் ஏர்வேஸ் லிமிடெட் கம்பெனிகள் விமானம் விடுகிறார்கள். இவையும் வாரமிருமுறைதான். இவை இரண்டும் இம்பீரியல் ஏர்வேஸ் விமானத்துக்குப் பிரயாணிகளைக் கொண்டு சேர்க்கின்றன.

1932ஞு ஜனவரிமீ த்தில் ஸுக்கூரில் லாயிட் அணைக்கட்டும் வாய்க்கால்களும் திறக்கப்பட்டன. அதனால் கராச்சி இன்னும் பெரிய துறைமுகமாவதற்கு வழி ஏற்பட்டுவிட்டது. சிந்து மாகாணத்தில் விவசாயம் புதுமையாகவும் முக்கியமாகவும் மாறிவிடும். முன்னே எல்லாம் அந்தப் பிரதேசத்தில் ஜலவசதி நீர்வளம் மிகவும் குறைவு. விவசாயிகள் எதையும் துணிந்து பயிரிட மாட்டார்கள். இந்த மாபெரும் தேக்கத்தைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வாய்க்கால்களில் பாய்ச்சுவதனால், ஏராளமான திரிசு நிலங்களெல்லாம் சாகுபடிக்கு வந்துவிட்டன. ஏற்கெனவே நன்செய் புன்செய்யாயிருந்த நிலமும் அதிக வெள்ளாமையுடையதாய் விட்டது. நாளாவட்டத்தில் இந்த மாகாணத்தில் உற்பத்தியாகக் கூடிய விளைபொருள்கள் அளவிலும் சரி, ரகத்திலும் சரி ஏற்றுமதிக்கு மிகவும் ஏற்றதாய் இருக்கும். இத்தனை வளமும் செழிப்பும் கொழிக்கிற சிந்து மாகாணமும் அதன் துறைமுகமான கராச்சியும் வெகு சீக்கிரத்தில் உன்னத நிலையை அடையுமென்றே சொல்லலாமல்லவா?

இப்போது கராச்சியின் ஜனத்தொகை இரண்டே முக்கால் லட்சம்தான். கராச்சியிலிருந்து ஓரே ஒரு இருப்புப் பாதைதான் ஓடுகிறது. இது சிந்து நதிக்கரையின் வலது கரையோரமாக சுக்கூருக்கும் குவெட்டாவுக்கும் போகிறது. இடது கரையோரமாக ஹைதராபாத்துக்கும், ரோரிக்கும், லாகூருக்கும் போகிறது. இது வடமேற்கு இருப்புப் பாதை என்கிற பிராட்கேஜ். ஹைதராபாத்தில் ஜோத்பூர் பிகானிர் ரயில்வே (சின்ன ரயில்) இதோடு வந்து சேருகிறது. சிந்து மாகாணத்தின் உள் பிரதேசங்களில் சில குட்டி ரயில்வேக்களும் இருக்கின்றன. இவற்றின் மார்க்கமாய் விளைபொருள்கள் வந்து பெரிய ரயிலில் ஏற்றுமதி ஆகின்றன.

கராச்சி துறைமுகத்தின் வசதிகளில் முக்கியமானது துரைக்குக் கிழக்கே இருக்கிற 8600 அடி நீளமான ரேவுதான். மேற்குப்புறத்தில் நவீன சாதனங்களுடன் நிரம்பிய நாலு துறைகள் 1300 அடி நீளத்துடன் இருக்கின்றன. இந்த ரேவில் 550 அடி நீளமுள்ள கப்பல்கள் பத்து நிற்கலாம். 500 அடி நீளமுள்ள கப்பல்கள் இரண்டு, 450 அடியுள்ளவை மூன்று, 400 அடியுள்ளது ஒன்று, 350 அடியுள்ளது ஒன்று, ஒன்றன் பின் ஒன்று நிற்க இடமிருக்கிறது. 575 அடி உள்ளவை மூன்றும் 600 அடியுள்ளது ஒன்றும் நிற்கலாம். இரண்டு டன் தூக்கக்கூடிய கிரேன் (மின்சாரத்தால் வேலை செய்கிறவை) பத்து இருக்கின்றன. தண்ணீரால் இயங்குபவை எண்பத்தாறு இருக்கின்றன. இவை 35 அந்தர் 30 அந்தர் தூக்கும். 30 டன் தூக்கக் கூடியது ஒன்றும், 14 டன் தூக்கக்கூடியது ஒன்றும் ரேவிலே இருக்கின்றன. கடலில் போய் சாமான் இறக்குவதற்கு 30 டன் தூக்குகிற கிரேன் ஒன்றிருக்கிறது. துறைமுகத்தின் தென்கோடியில் ராணுவம் இறங்கவும், பிரயாணிகள் இறங்கவும், ரயில்வே சாமான் இறங்கவும் ரேவுகள் இருக்கின்றன. அதற்கும் தெற்கே (மண்) எண்ணெய் இறக்குமதிக்குத் தனியே ஒரு ரேவு உண்டு. கப்பல்களை நங்கூரம் போட்டு நிறுத்த 13 மூளைகளும் ஐந்து வளையங்களும் இருக்கின்றன.

துறைமுக விவகாரங்களைக் கவனிக்க 15 பேர் கொண்ட போர்ட் டிரஸ்ட் ஒன்றிருக்கிறது. இதற்குத் தலைவரை சர்க்

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா
பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

# ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

## கீர்த்தனை 5

ஹம்ஸத்வனி ராகம்] [ஆதி தாளம்

### ஸாஹித்யம்

பல்லவி

த்யாகராஜ தே நமோ நம :

அனுபல்லவி

யோகி ராஜ ஸம்ஸது பாஸித
ராகிலோக தூர, பாஹிமாம் விபோ,

சரணம்

முசுகுந்த மஹீபதி புண்யச்ய
பல திவ்யதனோ, சிரமேவ தவ
ஸ்மரணம் வினு விபலம் வயோ
கதமேவ பஹு மமயக்ஞ பதே :

### தாத்பர்யம்

யோகி ச்ரேஷ்டர்களால் உபாஸிக்கப்பட்டவரும், பற்றுள்ளவர் (அஞ்ஞானி)களுக்கு எட்டாதவரும், முசுகுந்த சக்ரவர்த்தியின் மிகுந்த புண்ணியத்தின் பயனை திவ்ய மூர்த்தியை உடையவரும், ஆன ஹே த்யாகராஜ ப்ரபோ! வெகு காலம் உம் ஞாபகமில்லாமல் யக்ஞேச்வரனை எனக்கு நிஷ்பலமாக அதிக வயது சென்றுவிட்டது. (இப்போது) என் நமஸ்காரத்தை ஏற்றுக் கொண்டு என்னை ரக்ஷியும்.

---

கார் நியமிக்கிறார்கள். நாலு பேரை கராச்சி (வெள்ளைக்கார) வர்த்தகர் சபையும், இருவரைக் கராச்சி இந்திய வர்த்தகர் சங்கமும், இருவரைக் கப்பல்வர்த்தகர் சங்கமும், ஒருவரைக் கராச்சி நகர சபையும், ஐவரை சர்க்காரும் நியமிக்கிறார்கள். அவ்வைவருள் ஒருவர் தொழிலாளர் பிரதிநிதியாயிருப்பார். 1907-ம் வருஷத்திலிருந்து கராச்சி முதல்தர துறைமுகமென்று எண்ணப்பட்டு வருகிறது. இதற்கு ஒரு கஸ்டம்ஸ் கலெக்டரும் மூன்று அசிஸ்டெண்டு கலெக்டர்களுமுண்டு. இந்தத் துறைமுகத்துக்கு வருஷவாரி இறக்குமதி சுமார் முப்பது கோடி ரூபாய், ஏற்றுமதியும் முப்பதுகோடி ஆக வர்த்தகம் அறுபதுகோடி. வருமானம் ஒரு கோடி. செலவு முக்கால் கோடி ரூபாய். சராசரி 4000 கப்பல்கள் வருஷவாரி வந்து போகின்றன. அவற்றுள் கால்வாசி பிரிட்டிஷ் கப்பல்கள். துறைமுகத்தின் சொத்துக்கள் சுமார் ஐந்து கோடி பெறும். இந்தத் துறைமுகத்தை இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று 1921-ம் வருஷம் திட்டம் போட்டார்கள். அவற்றில் சில நிறைவேறியுள்ளன. மற்றவையும் நிறைவேறிவிட்டால் இணை இந்தியாவில் இராது.

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| | ஸ்நிபாக<br>த்யாகராஜ | ரீஇக<br>தே வ ந | பாஅ க ‖<br>மோந ந |
| பஅஅ<br>மோந | ஷ | ஷ | ஷ ப ‖<br>ந |
| நிஸ்ரீ<br>மோநந | ஷ | ஷரி<br>ந | காரி ரி ‖<br>மோந ந |
| ஸஅஅ<br>மோனு | | | |

அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| | கக பாக<br>யோகி ராஜ | பாஅ ஸ்<br>ஸம்ம் ஸ | நி பாக ‖<br>து பாஸி |
| ரிஇஇ<br>தஅஅ | ஷ நி<br>ஜ | ஸ்ாஅ<br>ஸம்ம் | ஷ |
| ஷ | ஷ நி<br>ஜ | நிஸ் ரீ ஸ்ரி<br>ஸம் ம் ஸஅ | ஸநி ஷ<br>துஉ |
| ஷ | | | |
| | ஸ்க்ரீக்<br>ராகிலோக | ரீஸ் ஸ்ரி<br>தூர பாஅ | ஸ்நி பாப ‖<br>ஹிஇ மாம்வி |
| ரீஇ<br>போந | | | |

சரணம்

| | | | |
|---|---|---|---|
| | கக பாக<br>முசு குந்த | ப நீ ஸ்ரி<br>மஹீ பஅ | ஸ்நீ பாக ‖<br>திஇ புண்ய |
| கரீ<br>சயஅ | கக ரீரி<br>பல திவ்ய | ஸ ஸா நி<br>த் ஞே சி | ப காரி ‖<br>ர மேவ |
| ரி ஸா<br>த வஅ | | | |
| | நிப ஸ்ாநி<br>ஸ்மர ணம்வி | ஸ்ாஅ ஸ்<br>ஞஆ வி | க்ரீஸ் ‖<br>பலம்வ ‖ |
| நிஸ்ரிஸ்ஸ்நி<br>யோநநநந | ஸ்க் ரீக்<br>கத மேவ | ரிஸ் ஸ்ரிஸ்நி<br>பஹு மஅமஅ | பாபப ‖<br>யக்ஞப |
| ரீ இ<br>தே வ | | | |

---

## கீர்த்தனை 4

குறிப்பு :—முகாரி "அனுதி வாரணு"வில் கீழ்க்கண்ட மாறுதல்களைச்செய்து அச்சிடப்பட்டுளது.

### ஸாஹித்யம்

அனுபல்லவி

*தினதிப ப்ரப, த்ரிஷ்வபி விதிஷு
விதிஹரி புரஹர வீக்ஷித கருண.

சரணம்

வ்யாஸ முனிவர வர்ணித சரித
*த்ராஸ ஸமாகுல ப்ராணிச ரண்ய.
வாங்மன ஸாதீத etc. (மற்றது முன்போல்)

### தாத்பர்யம்

சூர்யனைப்போல் பிரகாசிப்பவரே, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்ற மூன்று காரியங்களிலும் etc.

வியாஸ முனிவரால் வர்ணிக்கப்பட்ட சரித்திரத்தையுடையவரே, பயத்தினல் கலங்கிய பிராணிகளுக்குச் சரணமளிப்பவரே, (மற்றது முன்போல்)

**மாறுதல் செய்யப்பட்ட ஸ்வரம்**

அனுபல்லவி

தத ஸ்ரீக் ரி இஸ்ரீக்ரீ ஸ்நிதா ஸ்ா ||
தின திபப்ரப அத்ரிஇஷ்வபிஇ விஇதி ஷுஉ

ஸப
உஉ

த த ஸ் ரீக்ரி ரி ரி ரீக்ரி ரி ஷெ
தி ன தி பஅஅ அப்ர பஅஅ அ

த த ஸ் ரீ ஸரி மக ரி ஷெ
தி ன தி ப ப்ரஅபஅ அ

**(2-வது ஆவர்த்தம் புதிதாய் சேர்க்கப்பட்டது.)**

சரணம்

பா பப மகரீ க ஸா அ ரீமப நிஇத பா
த்ராஸஸ மஅஆ கு லஅ அ ப்ராணிச ரஅண்ணயஅ

அ
அ

---

* இந்த இடங்களில் ஸாஹித்யம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.)—ய. ம.

## அத்தியாயம் 4

# தாயாதிக் காய்ச்சல்

[டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம். ஏ., எல். ஐ. எம்.]

தாயாதிக் காய்ச்சல் யாரைவிட்டது! கோவிந்தய்யரின் முப்பாட்டனாரும் சாஸ்திரிகளின் முப்பாட்டனாரும் ஒன்றுவிட்ட ஸகோதரர்கள். ஆகவே சுப்பா தீக்ஷிதன் பொர்சு கோவிந்தய்யரை இப்பொறுமைக் கும்பலுக்கு தலைமை வகிக்கச் செய்தது.

இப்பூசல்களுக்குக் காரணம் எப்பொழுதும் அல்ப விஷயங்களாகவே இருக்கும். ஞானம் நன்கு மறைந்துவிடும். உடனே இக்காய்ச்சல் பற்றிக்கொள்ளும். சாஸ்திரிகளை ஒரு அசடு என்றே நம்பினார்கள். இந்த நம்பிக்கையின் பலத்தைக்கொண்டே இவருடன் வ்யவகாரங்களைத் துவக்கினார்கள். "ஊருடன் ஒத்துவாழ்" என்றதையறிந்திருந்த சாஸ்திரிகள் இந்த மகா ஜனங்களை மரியாதை செய்வதற்காக அசடாக இருந்திருந்தால் ஒரு விதக் கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்காது. அப்படிச்கில்லாமல் இவர்களையே அசடாக்கிய சாஸ்திரிகளை லகுவில் விடலாமா? இவர் அகம்பாவத்தை யழிக்கவேண்டும் என்றே பொருமினது இக்கும்பல்.

உலகம் ஏற்பட்ட காலம்முதல் இன்றைய வரையிலும் - ஏன், நாளைக்கும் கூடத்தான் - எல்லா சண்டைகளுக்கும் காரணம் பகுத்தறிவை மயக்கும் இத்தாயாதிக் காய்ச்சல்தான். பக்கத்து வீட்டுக்காரருடன் ஏற்படும் சச்சரவு முதல் பெரிய வல்லரசுகளின் சண்டையாகிற யுத்தம்வரையில் இதே தத்துவந்தான் பரவி நிற்கிறது. ஞானம் ஒரு சாராருக்கே சொந்தம். ஆகவே இச்சாரார் சொல்லுவதை மற்றவர்கள் கேழ்க்க வேண்டும். இல்லாவிட்டால் யுத்தம். விதவிதமான ஜோடனைகளுடனும் பெயர்களுடனும் தோன்றும் இக்காய்ச்சல். அலங்காரம் மாறுமேயொழிய குட்டிச்சாத்தான் அதே குட்டிச்சாத்தான்தான். சிலசமயங்களில் தெய்வீகக் குழந்தையைப்போல் காக்ஷியளிக்கும். இதை ஆரோக்கியமான வளர்ச்சிக்கென்றே அமைந்த போட்டாப்போட்டி என்பார்கள். ஆனால் கூர்ந்து கவனித்தால் பழைய கருப்பன்தான். தலையூரில் சிறிய அளவில் நடந்தால் உலகமெங்கும் பெரிய அளவில் ஏற்படுகிறது. வேறு வித்தியாசம் இல்லை.

ஆரம்பத்தில் அல்ப திருட்டுக்களும், அனமதேயப் புகார்களும், ஸ்வல்ப அளவில் வழிம்பறிகளும் நடந்தன. இவைகளை எல்லாம் சாஸ்திரிகள் பொருமையுடன் சமாளித்துவிட்டார். மேலும் எவ்விதம் இவரை தொந்தரவு செய்வது என்று யோசித்தார்கள். இவர் திண்ணைப் பள்ளிக்கூடத்தைப் பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பிள்ளைகளை இவர் வருந்தியழைக்கவில்லை. அவ்விதமே இவருடைய வைத்திய கைங்கர்யத்தைப் பற்றியும் குற்றங்கள் சொல்லிம் புறப்பட முடியவில்லை. அப்படிச் செய்தால் நஷ்டம் ஜனங்களுக்கேயொழிய சாஸ்திரிகளுக்கு இல்லை என்பதை நன்கறிந்தவர்கள் இச்சனங்கள். ஆகவே நன்காலோசித்து இவருடைய வியவசாயத்தைஉருப்படாமலாக்கிவிட வேண்டுமென்றே தீர்மானித்தார்கள்.

தீர்மானம் உடனே அமுலுக்கு வந்தது. பொதுவில் வயல்களில் பயிர்களுக்குத் தண்ணீரைத் திருப்பி முறைப்பிரகாரம் தண்ணீர் கட்டுபவர்கள் தொன்றுதொட்டு சம புத்தியுடன் ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் பாராட்டாமல் வழி

யம் செய்துவருகிறவர்கள். இவர்களைக் கலைக்க பணத்தைத் தாராளமாக கோவிந்தய்யர் உபயோகித்தார். சாஸ்திரிகளின் பயிர்கள் அடிக்கடி தண்ணீருக்குத் தவிக்கும்படியாகிவிட்டது. ஏன் தண்ணீர் வைக்கவில்லை என்று கேட்டால் ஜ்வரம் வயிற்றுவலி முதலிய சாக்குகள் கூறுவார்கள். கைக்கூலி பெற்று ஒரு பெரும் சமூகச் சேவையில் பழுதுண்டாகும் வகையில் நடந்துக்கொள்ளும் இக்கசடர்களைக் கண்டு சாஸ்திரிகள் கோபங்கொண்டார். ஆனால் கோவிந்தயயரின் கும்பல்தான் லஞ்சம் கொடுத்து இவர்களை இளம் சிசுஹத்திக்கு சமானமான துஷ்க்ருய்த்திற்கு உடன்படச் செய்தது என்ற ஞாபகம் வந்ததும் இவர் சீற்றம் கோவிந்தய்யர்மீது சென்றது. "எய்தவனிருக்க அம்பை நோவதேன்" என்று எண்ணினார். அடுத்த க்ஷணம் சாந்தமாக ஆலோசித்தார். பொறுமையினால் மதிமயக்கமுற்ற கோவிந்தய்யருக்கு இரங்கினார். "இன்னா செய்தாரை பொறுத்தலவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்றபடியே நடக்கத் தீர்மானித்தார்.

சதாசிவனுடன் நேரிட வயலுக்குச் சென்றார். தண்ணீரின்றிப் பயிர்கள் வாடுவதைப் பார்த்தார். தானே மண்ணை வெட்டி மடை திருப்ப துவக்கினார். சதாசிவன் மண் வெட்டியை வாங்கிக்கொண்டு தீவிரமாகத் தண்ணீரை பாய்ச்சுவதில் முனைந்தான்.

சாஸ்திரிகள் நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்து வந்தார். சிறிது தூரம் சென்றதும் ஒரு வயலைப் பார்த்துத் திடுக்கிட்டார். ஈரப்பசை என்பதே இல்லாது பூமி வெடித்திருந்தது. "என்ன அக்கிரமம்! இவ்வளவு இழிவாகக்கூட நடந்துகொள்ளுமாறு பொறுமை மனிதனை யழித்து விடுகிறது!" என்று ஆச்சரியமுற்றார். தூரத்தில் தண்ணீர் கட்டிகள் ஒன்றையும் கவனியாது கொம்மாளம் அடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கூவியழைத்தார். ஆனால் ஒருவரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இவர் குரலைக் கேட்ட சதாசிவன் ஓடோடியும் வந்தான்.

"இது யாருடைய நிலமப்பா? நம்மைப்போல் துரதிர்ஷ்டமுள்ள மற்றொரு சாது யார் இவர்கள் திருஷ்டியில் விழுந்தவர்?" என்று இரக்கம் தோய்ந்த குரலில் வினவினார்.

"கோவிந்தய்யருடையது, சாமி" என்றான் சதாசிவன்.

பதிலைக் கேட்டதும் சாஸ்திரிகள் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். இதுகாறும் கோவிந்தய்யர்மீது தவறுதலாக வல்லவோ கோபித்துக் கொண்டிருந்துவிட்டோமென்று கழிவிரக்க முற்றார். உடனே அந்த வயலுக்குத் தண்ணீர்கட்ட ஏற்பாடு செய்தார். மேலும் வயல்களைச் சுற்றி வந்தார். அனேகமாக கோவிந்தய்யரின் எல்லா நிலங்களும் இவ்விதமே கவனிப்பாரற்று இருந்தன. கோவிந்தய்யர் சில நாட்களுக்குமுன் வேலைக்காரர்களைக் குறித்னப் புகார் செய்ததில் உண்மை இருககிறதென்று அங்கலாய்த்துக் கொண்டார். இதை நினைத்துக் கொண்டே வீடு திரும்பினார்.

இவ்வாறு சில தினங்கள் நேரிட "தன் கையே தனக்குதவி" என்று பாடுபட்டார். தூரத்திலிருந்து இவைகளை எல்லாம் க்வனித்துவந்த தண்ணீர் கட்டிகள் மிக்க மனமாற்றம் அடைந்தார்கள். சாஸ்திரிகளின் வயல்களில் தண்ணீர் தொல்லை என்ற புகார் மறைந்து பழங்கதையாகிவிட்டது.

இவ்வித மனமாற்றத்தின் சூக்ஷ்மத்தைக் கர்மயோகியாகிய சாஸ்திரிகள் கவனித்தறியப் போகிறதில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதுவே" என்று எண்ணுகிறவர். ஆனால் நாமறிவது மிக்கப் பயன்படும்.

கோவிந்தய்யர் தன் முன்னோர்களின் பெருமை வாய்ந்த குணங்களைக் கடைப்பிடிக்காது செல்வாக்கை மட்டும் காப்பாற்ற விழைந்தார். அதன் பலன் வேலைக்காரர்களுக்கு இவரிடம் மதிப்புக் குறைந்தது. இவருடைய அற்பத்தனம் அவர்களுக்கு இவரிடம் கொஞ்சம் நஞ்சமிருந்த மதிப்பையும் போக்க உதவியது. "எதிரிக்கு இரு கண்கள் கெட்டால் தனக்கொரு கண் கெட்டும்" என்கிற

மனப்பான்மையைம்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பொறாமைக் கடிமைப்பட்டு அற்பதனத்தி லிறங்கிய கோவிந்தய்யர் "எதிரிக் கொரு கண் கெடுவதாக இருந்தால் தனக்கிரு கண்களும் போகட்டும்" என்று துணிந்து விட்டார். சாஸ்திரிகளுக்குச் செய்யச் சொன்ன கர்ரியத்தைத் தண்ணீர் கட்டிகள் தாராளமாகக் கோவிந்தய்யருக்கும் சேர்த்துச் செய்தார்கள். இதை யறிந்திருந்தும் பௌருஷமற்ற கோவிந்தய்யர் ஒன்றும் செய்ய வகையறியாது வாளாவிருந்தார். இப்பொழுது இவர் நிலங்களும், சீர் பெறுவதைப் பார்த்ததும் இவருக்குக்கூட சிறிது மனமாற்றம் ஏற்பட்டது என்றால் தண்ணீர் கட்டிகள் மனம் மாறினது ஆச்சரியமில்லை. அவர்களுக்கு சாஸ்திரிகளிடம் கோபமோ தாபமோ இல்லை. கோவிந்தய்யரின் பணத்தால் தடைப்பட்டிருந்தார்கள். சாஸ்திரிகளின் குணத்தால் விடுதலைபெற்ற மனத்தினராக சாஸ்திரிகளிடம் அந்தரங்க விச்வாசம் கொண்டார்கள்.

பயிர்களும் யாதொரு தொல்லையுமில்லாமல் வளரத் தொடங்கின.

கோவிந்தய்யர் சில க்ஷணங்கள் தன்னை மறந்து சாஸ்திரிகளிடம் பக்தி கொண்டார். அவருடைய உதார குணத்தைச் சிலாகித்துக் கொண்டார். சாஸ்திரிகளிடம் சென்று தன் பொறாமைக் குணத்தால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை மறந்து தன்னை மன்னிக்கும்படி இரைஞ்சி கேட்டுக் கொள்ளுவதென்று கூட யோசனை செய்தார். ஆனால் தாயதிக் காய்ச்சல் அவ்வளவு சுலபத்தில் மறைவதாக இல்லை. அதுவே வென்றது. கோபமுற்றார். தண்ணீர் கட்டிகளை அல்பர்களென்றுதரினர். இவர்களை இனியும் நம்பி ஏமாறக் கூடாதென்று தீர்மானித்தார். சாஸ்திரிகளை ஒருகை பார்க்காமல் விடுவதில்லை என்று சபதம் செய்தார். இவர் மூளை தீவிரமாக வேலை செய்தது. இவர் சுவாசம் நெருப்புக் காற்றாக இருந்தது. அடிப்பட்ட வேங்கைப்போல் கோபமுடன் இருந்தார். உள்ளேவந்த சுப்பா தீக்ஷிதனைக்கூட வாவென்றழைக்கவில்லை.

சாஸ்திரிகளின் வயலைப் பார்க்கும்போதெல்லாம் கோவிந்தய்யருக்கு வயிற்றைப் பற்றி எரியும். கருகருவென்று பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தன. மாடுகளை விட்டு மேய்த்துவிடலா மென்றால் இந்த சதாசிவன் ராத்திரியும் பகலும் கருத்துடன் காவலிருந்தான். குடியானவர்களும் சாஸ்திரிகளிடத்தில் மிக்க மதிப்பு வைத் திருந்தது இவ்வக்கிரமத்திற்கு வேண்டிய துணிச்சலை எழுப்பவிடவில்லை.

சுப்பா தீக்ஷிதனே சமய சஞ்சீவி என்று தீர்மானித்து அவன் யோசனையை நாடினார் கோவிந்தய்யர். அவன் வகுத்த வழியில் பணத்தை வாரி இறைத்தார். குடியானவர்களில் பெரும்பாலர்களை தனக்குக் கடன்காரர்களாகச் செய்து கொண்டுவிட்டார். இப்பொழுது இவர்கள்மீது உண்மையிலேயே ஆதிக்கம் கிடைத்துவிட்டதென்று எண்ணி மகிழ்ந்தார். சில வாக்காளர்களைப்போல் பணத்தையும் பெற்றுக்கொண்டு கடைசி நேரத்தில் சாஸ்திரிகளுக்கும் உதவி விட்டால் என்ன செய்வதென்று முன் கூட்டியே பல அடியாட்களையும் தயாரித்து வைத்திருந்தார்.

அறுவடைக் காலம் நெருங்கியது. குடியானவர்கள் பணத்தினால் தடைப்பட்டு அறுப்புக்கு வரத் தயங்கினார்கள். சாஸ்திரிகள் ஒருகணம் மலைத்தார். கோவிந்தய்யர் செய்த வேலை என்று கண்டுகொண்டார். "பணம் பாதாளம் மட்டும்" என்ற மொழி உண்மையாகி விட்டதே என்று தவித்தார்; நிராசையுற்றார். அர்ச்சுனனைப் போல் சித்தாக்ராந்தரானார். "ராஜ்யம் வேண்டேன், ஜயம் வேண்டேன், உயிரோடிருத்தலையோ போக போக்கியங்களையோ வேண்டேன்" என்று அர்ச்சுனன் சொல்லும்பொழுது என்ன நிலையிலிருந்திருப்பான் என்று உண்மையிலனுபவித்தார். நேரிட கோவிந்தய்யரிடம் சென்று, "ஐயா, எனக்கு வேண்டாம் இந்தத் தானியங்கள், இந்த நில புலன்கள்கூட; உங்களைப் போலொத்த பண்ணையுள்ள

வர்கள் வைத்துப் பராமரிக்க வேண்டி யவை. வீணில் நான் இந்த உலையில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. தயவு செய்து அறுவடையைச் செய்து நீங்களே அனுபவித்துக் கொள்ளுங்கள். தான்ய லக்ஷ்மியை மட்டும் வயலிலேயே மக்கும்படி விட்டு விடாதீர்கள். உங்களுக்குப் புண்யமுண்டு" என்று சொல்லி விடலாமாவென்றுகூட யோசித்து விட்டார். உடனே கண்ணன், "இந்தத் தைன்யத்தை விட்டு எழுந்திரு. உன் கர்மாவைச் செய். நான் நடத்துகிறேன். நீ கேவலம் நிமித்த காரணமென்பதை மறக்காதே" என்று தனக்கே கீதையைக் கூறுவது போன்ற ஓர் உணர்ச்சிப் பொங்க தேகம் சிலிர்த்தது. கண்களைக் கசக்கிக் கொண்டார். ஒரு தீர்மானத்தை யடைந்தவராக, "சதாசிவா, வா; போகலாம் வயலுக்கு" என்றார். சதாசிவனுதவியுடன் தானே வயலில் அறுப்புக்கிறங்கினார்.

அக்கிரகாரத்தில் சுந்தரமய்யரும் குடியானத் தெருவில் பிச்சை முத்துவும் சாஸ்திரிகளின் உண்மை யோக்கியதையை ஊடுருவிப் பார்த்தறிந்தவர்கள். சாஸ்திரிகளைச் சேர்ந்தவர்களென்று இவர்களையும் இவர்களைச் சேர்ந்த ஒரு சிறு கூட்டத்தினரையும் அசட்டுப் பட்டம் கட்டி வைத்திருந்தார்கள் இக்கிராமத்தார்கள். இரண்டு கைகள் தட்டினுல்தானே சப்தம் என்று இவர்கள் ஒரு வம்பிலும் கலக்காமல் வாளாவிருந்தார்கள். சாஸ்திரிகளே நேரிட அறுப்புக்கிறங்கியதைக் கேட்டதும் உணர்ச்சி பெற்றெழுந்தார்கள்; இவர்களும், உடனுழைத்தார்கள். அறுப்பும் செவ்வனே வருடம்போல நல்ல கண்டுமுதலைக் கொடுத்தது.

கோவிந்தய்யர் ஏமாற்றமடைந்தார். ஆனால் அவருள்ளம் இப்பொழுது சாந்தமாகவே இருந்தது. சுப்பா தீக்ஷிதன் எவ்வளவோ வகையில் இவரை முறுக்கேற்ற முயன்றான். சாஸ்திரிகளிடம் இவனுக்குத் துவேஷமுமில்லை. இவனுக்கு வேண்டியது பணம். இப்பணம் கோவிந்தய்யரிட மிருந்தது. ஆகவே அவர் மனோபீஷ்டம் நிறைவேறும் வகையில் பற்பல வழிகளைச் சொல்லிக்கொடுத்தான். இதனால் ஒரு சாது துன்பப்பட்டால் அந்தப் பாபம் இவனைச் சேராதென்றே நம்பினான். நாளைக்கே சாஸ்திரிகளிடமிருந்து பணம் கிடைக்குமென்றால் முற்றிலும் நூதன மனிதனாக நடந்துகொள்ளத் தீக்ஷிதன் தயார்தான். இவனைப்போன்ற கர்மயோகி ஒருவருமில்லை என்றுகூட சொல்லும்படி நடிப்பான். இது இவன் வந்த வழி. இவன் யோக்கியனுமில்லை; கிராமத்ரோகியுமில்லை. அவன் கர்மகதி அது என்று சொல்லாமல் நாமெல்லோரும் என்ன செய்வது? சாஸ்திரிகளிடம் பற்றுதல் வைக்கும் வரையில் இவ்விதம்தான் கொள்ள வேண்டும்.

கோவிந்தய்யர் எவ்வளவோ இடைஞ்சல் விளைவித்தும் கோபம் கொள்ளாமலும், பதிலுக்குபகாரமே செய்து வந்த சாஸ்திரிகளின் நடத்தையே முடிவில் ஆச்சரியமான மன மாறுதலை ஏற்படுத்தி விட்டதோ என்னமோ? கோவிந்தய்யர் சிறிதுகூட உற்சாகம் கொள்ளவில்லை. சுப்பா தீக்ஷிதனைப் பார்த்தார். அப்பார்வையில் கோபமில்லை, ஏமாற்றமில்லை. ஏதோ ஒன்றைத் தேடுவதுபோலிருந்தது அப்பார்வை. "எவ்வளவோ தனத்தை வாரி வாரி கொடுத்திருந்தும் சிறிதும் பயனடையாமல் உன் சுயநலத்தை யுத்தேசித்தே மேலும் மேலும் என்னை ஏன் இயக்குகிறாய்? என்று கேழ்ப்பது போலிருந்ததோ என்னமோ? குனிந்த தலை நிமிராமல் தீக்ஷிதன் வெளி

யில் சென்றுன். எங்கு சென்றுனென்ற தகவலில்லை.

தாயாதிக் காய்ச்சலிலிருந்து விடுபட்டவர் ஓர் உணர்ச்சியு மற்றவர்போல் காணப்பட்டார். ஜ்வரத்தினின்றும் விடுபட்டவனைப்போல் மனோ பலமும் மூளை பலமும் அற்றவராகவே தோன்றினுர் கோவிந்தய்யர். சாஸ்திரிகளைப் பற்றிய சிந்தனையிலேயே பல நாட்களைக் கழித்தார் என்றும் கூறலாம். பகவானின் லீலையை யார் கண்டார்கள். கோவிந்தய்யர் எந்தக் காரியத்திற்கென்று ஏற்பட்டிருக்கிருரோ! பொறுத்திருந்தே அறிய வேண்டும்.

(தொடரும்)



# ஸ்ரீமான் வி. ராகவ அய்யங்கார்

[கா. சி. வேங்கடரமணி]

## 1

**த**ன் தினசரி பழக்கத்திற்குக் கொண்டு வராமல் ப்ராதஸ்நானத்திற்குப் பிரசாரம் வெகு காலமாய் செய்துவரும் உண்மையான தொண்டர்களில் நான் ஒருவன். காபிக்கும், காலை குளிக்கும் போட்டிப் பந்தயம் ஏற்பட்டால் யார் ஜெயிப்பார் என்று நான் 'பாரதமணி' வாசகர்களுக்குச் சொல்ல வேண்டியது அவசியமில்லை. இருந்தாலும் நான் மாயவரம் போகும் பொழுதெல்லாம், காவிரியின் சௌபாக்கிய வெள்ளத்தைக் கண்டு உள்ளம் பூரித்துக் காபியையும் மறந்து ரிஷப தீர்த்தத் துறையில் பழைய நாள் பள்ளி புகுந்த பையன்போல் காவிரியில் துளையும் வழக்கம் உண்டு.

பல வருஷங்களுக்குமுன் எனக்கு இந்த பாக்கியம் ஒரு சமயம் மாயவரத்தில் கிடைத்தது. காபியை ஜெயிக்கும் காலை குளி பாக்கியம். ஒரு நண்பருடன்—அவர் பெயரை நான் குறிப்பிடப்போகிறதில்லை—விடியற்காலம் நான் காவிரி ஸ்நானத்திற்கு மகாதானத் தெருவு வழியாய்ப் போய் துலா கட்டத்தை (லாகடம்) நுழைந்தேன்—'லாகடம்' கோவிந்த தீக்ஷிதர் மந்திரியா யிருக்கும்பொழுது நிர்மாணம் செய்த ஓர் பரந்த அழகிய சாந்நித்யம் கூடிய இடம் - இப்பொழுது தகரக் கடையும்,பட்டாணிக்கடலை கடையும், சிற்றுண்டி சாமான்கள் கடையும் நிறைந்து இடிந்த பார்வையுடன், இரண்டு பிரசித்தி பெற்ற ஆதீனத்தின் ஸ்வாதீனத்திலிருந்தும், தளர்ந்து நிற்கிறது. மனோவிசாலமிருந்தால் சொற்ப தொகையைக்கொண்டு இதை ஓர் கலைக்காட்சி மண்டபமாகவும், ஸங்கீத நிலையமாகவும், புத்தகசாலையாகவும் மாற்றி விடலாம். பணமிருந்தால் மனமில்லை. மனமிருந்தால் பணமில்லை. இது சிருஷ்டியின் விசித்திரம். ஈசனின் புன்சிரிப்பு லீலை.

வீடில்லாத ஏழைகள் படுத்து உறங்குமிடம் லாகடம்.மலம்,சிறுநீர், வெற்றிலைப் பாக்கின் கோரமான சேஷங்கள் நிரம்பிய இடம். தூக்கத்திலிருந்து விழித்ததும் விழிக்காததுமாய் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு, "பொழுது விடிந்தது, நாராயணா, போட்டுக்க வேணுமே, நாராயணா" என்று புலம்பிக்கொண்டு பல தலைகளும், கந்தத் துணிகளும், முழங்கால்களும், முழங்கைகளும், நான் லாகடத்தில் நுழைந்தவுடன் என் கண்களுக்குத் தோன்றின. என் மனம் சகிக்கவில்லை. அக்கம் பக்கம் திரும்பாமல் நேரில் பார்வையைத் திருப்பினேன். இது இருபத்தைந்து வருஷங்களுக்குமுன்.

ஓர் அழகிய இளைஞர் பிராத ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பி வருகிறார். தூய்மையும், தெளிவும், சாந்தமும், வினயமும், பரபரப்பும், களையும் முகத்தில் குடிகொண்டிருந்தன.

"இவர் யார்?" என்று என் நண்பரைக் கேட்டேன். "இவ்வளவு அருணோதயத்தில் காவிரியில் ஸ்நானம் செய்யும் பாக்யம் பெற்ற பக்தி வாய்ந்த இந்த இளைஞர் யார்?"

"இவர்தான் நம்முடைய முனிசிபல் ஹைஸ்கூலுக்குப் புதிதாய் வந்திருக்கும் தலைமை உபாத்தியாயர், வி.ராகவ அய்யங்கார்."

ஸ்ரீ ராகவ அய்யங்காரின் போகிற போக்கில் உள்ள நடையிலிருந்தே அவரை நிதானித்தேன். நடையின் வழியில் கோணல் குறுகல் கிடையாது. அடக்கமான அழகிய நேர்வழி. அடுத்த கர்மா

விலேயே கண்; பரபரப்பு; ஊக்கம். மாயவரம் குப்பை மோட்டில் இவர் ஒரு மாணிக்கம்தான் என்று உடனே எண்ணினேன். பிறகு அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குப் பலதடவைகளில் ஏற்பட்டது. உத்தமர். தலைமை உபாத்தியாயராக 25 வருஷகாலம் முனிசிபல் ஹைஸ்கூலிலிருந்து நெறிதப்பா தொண்டு செய்து இந்த மாதம் வேலையிலிருந்து ஓய்வு பெறப் போகிறார். இதை மாயவரம்கூட தக்க முறையில் கொண்டாடும் என்று நம்புகிறேன். தமிழ் நாட்டில் தங்கள் ஊர்களிலே வீரர்களைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமமான காரியம்.

## 2

ஸ்ரீமான் ராகவய்யங்கார் 1890-ம் வருஷத்தில் திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் பிறந்தார். 1908-ல் பி. ஏ. பட்டம்பெற்று 1910-ல் உபாத்தியாயராகத் திருச்சி ஸெய்ண்ட் ஜோஸப் ஹைஸ்கூலில் சேர்ந்தார். 1916-ல் எம்.ஏ. பட்டம்பெற்று ராஜமகேந்திரத்திலும், யாழ்ப்பாணத்தில் ஹிந்து காலேஜிலும் உபாத்தியாயராக இருந்தார். பிறகு 1919-ல் மாயவரம் ஸ்கூல் தலைமை உபாத்தியாயராக வந்து சேர்ந்தார். இதில் 25 வருஷம் மாறாத மாசில்லாத சேவை புரிந்தார்.

இந்த முக்கிய பதவியிலிருந்தபடியே, பல இதர துறைகளிலும் ஓயாத நிர்மாண வேலைகள் பல செய்திருக்கிறார். அவைகளில் சில தஞ்சாவூர் ஜில்லா உபாத்தியாயர்கள் சங்கத்தில் காரியதரிசியாகவும், உபதலைவராயும் 20 வருஷங்கள் தொண்டு செலுத்திச் சங்கத்தை நேர்மையாக நடத்தியிருக்கிறார். கூட்டுறவு இயக்கத்திலும், (Co-operative Movement) சாரணர் இயக்கத்திலும் பெரிதாய் ஈடுபட்டவர். உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் பொருட்டு 1925-ல் ஒரு கூட்டுறவு சங்கத்தை, சாமான்கள் வாங்கி விற்பதற்கு, மாயவரத்தில் நிர்மாணம் செய்தார். அது இப்பொழுது பிரபலமாய் நடந்து வருகிறது. கிராமசேவைக்கும், ஹரிஜன் மாணவர்கள் படிக்கவும், அவர்களின் ஹாஸ்டல் வசதிக்கும், திறமையுடனும், விடா முயற்சியுடனும் பல வழியில் பாடுபட்டிருக்கிறார். சேஷுவய்யர் பாடுபட்டு கட்டிய ஹாஸ்டலில் வெகுகாலமாய் மாணவர்கள் சேரவில்லை. சேரும்படியான வழிகளை தேடி, அதை 'மாடல்' ஹாஸ்டலாக ஸ்ரீமான் ராகவ அய்யங்காரும், ஸ்ரீமான் என். எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யரும் செய்து வைத்திருக்கிறார்கள்.

கைத்தொழிலில் மாணவர்களை ஈடுபடும்படி பாடுபட்டு இருக்கிறார். பள்ளியில் கதர் நூற்கவும், நெய்யவும், பேபர் செய்யவும், தச்சுவேலைகள் செய்யவும் ஏற்பாடு செய்திருக்கிறார். என்னைப்போல், கைகுத்தல் அரிசியில் அளவில்லாத அன்பு பாராட்டி வருகிறார். மாணவர்களைக் கிராமாந்திரங்களுக்குக் கூட்டமாக அழைத்துப் போய் கிராம வாழ்க்கையின் இன்பத்தை உணரும்படி செய்திருக்கிறார். மத சம்பந்தமான உபந்யாசங்களைப் பள்ளிக்கூடத்தின் ஆதரவில் ஏற்படுத்தியிருக்கிறார். பிராத ஸ்நானம்போல், எப்பொழுதும், கைவிடாமல் கதர்த் துணியையே அணிந்து வருகிறார். ஸ்ரீ ராகவ அய்யங்கார் தீவிரமான தேச பக்தர். நிர்மாண வேலையால்தான் - சொல் மாத்திரம் போதாது செயல் வேண்டும் - தேசத்திற்கு ஸ்வராஜ்யமும் நமது வாழ்வுக்குப் புத்துயிரும் வரும் என்ற கொள்கையைக் கொண்டவர். ஸ்ரீ ராகவ அய்யங்கா ரவர்களைப்போலொத்தவர்கள் மூலம்தான் நமது நாட்டிற்குப் புத்துயிர் பிறக்கவேண்டும் என்பது என் நம்பிக்கை.

## 3

ஸ்ரீ ராகவ அய்யங்காரின் மேன்மைகள் பல. அல்லிக் குட்டையில் தாமரையைப் போல், நமது அடிமை நாட்டில் ஸ்ரீ ராக அய்யங்கார். அவர் செயல் பல; சொல் சில. வழி நேர்வழி. அடக்கமான வினயமான நேர்வழி. தர்மத்தையும், ஒரு கொள்கையையும் ஒட்டின நேர்வழி. தன் லாபநஷ்ட கணக்குப் பார்க்கும் வழியல்ல. கர்மாவை எப்படித் திருந்த செய்வது என்பதுதான் முக்கிய நோக்கம், ஊக்கம்.

இன்றையதினம் ஸ்ரீமான் ராகவ அய்யங்கார் வேலையிலிருந்து-25 வருஷம் முனிசிபல் ஹைஸ்கூலிலிருந்து தலைமைஉபாத்தியாயர் வேலையைத் தங்குதடையன்னியில் பார்ப்பதே ஒரு பெரிய காரியம் - ஓழிவு பெற்றாலும், நமக்கு புத்தியும், பாக்கியமும் இருந்தால் உண்மையான தேசிய கல்வித்திட்டத்தை (National Education) போட்டு, ஒரு தேசீய பள்ளியை ஐந்து வருஷகாலமாவது அவர் நடத்திக் காட்டும்படியாக நாம் கேட்டுக் கொள்ளவேண்டியது நமது கடமை. அவர் ஞாபகார்த்தமாக அதுவே ஓர் உத்தமமான ஸ்தாபனமாகும். நமக்கு ஸ்வராஜ்யம் கிடைத்துத் தேசிய சர்க்கார் ஏற்பட்டாலும், அரசியல் கல்வித்திட்டத்தில் ஈடுபடாத, தேசிய கல்வியைப் போற்றும் ஒரு பரிசுத்தமான பள்ளி அங்கும், இங்கும் நமது நாட்டில் பரவி நிற்க வேண்டும். இவைகள் தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு உண்மையான வழி காட்டி. கைத்தொழில் அபிவிருத்திக்கு (Industry) விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகள் (Scince Laborataries) முக்கியமோ, அப்படியே அரசியல் முதலையின் வாய்க்குள் அகப்படாத ஒரு தேசிய கல்வித்திட்டமும் பள்ளியும் நமது நாட்டில் அவசியம்.

இதையே ஒரு முக்கிய லட்சியமாக வைத்துக்கொண்டு தமிழ்நாட்டுக் கல்வி ரஸிகர்களும், தலைவர்களும், மாயவரம் வாசிகளும், ஸ்ரீ ராகவ அய்யங்கார் சிஷ்ய கோடிகளும் பாடுபட்டுத் தக்க ஞாபகார்த்த நிதியைச் சேர்த்துப் தேசியக் கல்வியைப் புகட்டும் ஒரு பள்ளியை நிர்மாணம் செய்வதே உத்தம கைங்கர்யமாகும்.

இப்படி நாம் செய்தால் ஸ்ரீ ராகவ அய்யங்காரின் உள்ளம் பூரிக்கும். மனம் களிக்கும். தேசியக் கல்வியில் பூர்ண பக்தி உள்ளவர். இவர் மேன்மையான, தூய்மையான வாழ்வுக்கு இதுவே ஒரு சிறப்பான சிகரமாகும்.







## நம் கடமைகள்

கோயில்களில் முளைத்திருக்கும் செடியையும் படர்ந்திருக்கும் பாசியையும் அழுக்கையும் நம்முடைய கைகளால் வருஷத்திற்கு ஒரு நாளேனும் அகற்றவேண்டும். அப்பொழுதே நம் கைகள் கைகளாகும்.

பசுவின் வாயில் ஒரு கவளமாவது பச்சைப் புல்லை நம் கைகளால் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் க்ரஹஸ்தன் செய்யவேண்டிய கடமைகளில் இதை ஒன்றாகத் தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

—" காமகோடி.

# அஜீர்ணம்

[திருஷ்ட கர்மா]

## அத்தியாயம் 2

மறுநாள். டாக்டர் சுந்தரம் வைத்தியசாலைக்கு வந்ததும் வாராததுமாக சர்மாவை சரமாரியாகக் கேள்விகள் கேட்கத் துவங்கிவிட்டார்.

டா. சு: "ஆமம்" என்றால் என்னவென்று விரிவாகச் சொல்லுகிறேனென்றீர்களே! இப்பொழுது வியாதியஸ்தர்கள் வரச் சிறிது நேரம் ஆகும். அதற்குள் விவரித்துக் கூறுங்களேன்.

சர்மா: சுந்தரம்! பள்ளிச்சிறுவர்களுக்குக்கூட ஆவலும் ஆத்திரமும் இருக்கிறதில்லை இக்காலத்தில். "ஆமம்" என்றால் பக்குவமாகாதது, இன்னும் ஜீர்ணமாகாமலிருப்பது என்று பதப் பொருள் கூறப்படும். இதை நீ யறியாயோ!

டா. சு: பதத்தின் அர்த்தம் அறியப்பட்டதுதான். ஆனால் இந்த சரீர சாஸ்திர ஆராய்ச்சியில் எவ்வாறு பொருத்துவது என்றுதான் விளங்கவில்லை. அன்று அஜீர்ணமென்ற விஷயத்தைச் சொல்லுகையில் இப்பதத்தைச் சொல்லிப் பிறகு விவரமாக ஆராயலாம் என்றீரே! இப்பொழுது இதுவே அஜீர்ணம் என்கிறீரே?

சர்மா: ஆம் அஜீர்ணம் என்கிறது ஆகாரத்தைபற்றி விசாரிக்கையில் அறியப்பட்ட ஒரு கோளாறு. இந்த அஜீர்ணம் என்கிற வியாதியே "ஆமாஜீர்ணம்", "விதக்தாஜீர்ணம்", "விஷ்டப்தாஜீர்ணம்", "ரஸசேஷாஜீர்ணம்" என்று நான்கு வகைப்படும். அதில் கபதோஷத்தினால் ஏற்படும் அஜீர்ணம் "ஆமாஜீர்ணம்" எனப்படும். இதில் கண், தொண்டை முதலியவைகளில் வீக்கம் தோன்றும். அப்பொழுதுதான் சாப்பிட்டதுபோல் ஏப்பம் வரும். நாக்கில் ஜலம் சுரக்கும். நெஞ்சிலடிக்கடி எதுக்களிக்கும். தேகம் பூராவும் கனமாகத் தோன்றும். "விதக்தாஜீர்ணம்" என்பது பித்தத்தால் ஏற்படுகிறது. தாகம், கண் இருண்டு வருகிறது, கிறுகிறுப்பு, புளிச்சேப்பம், எரிச்சல் முதலிய உபத்திரவங்களால் பித்தத்தின் குணம் என்றறியலாம். இவ்விதமே பசியின்மை, வயிற்றுவலி, வயிற்றுப்புசம், மலபந்தம் முதலிய வாதக் கோளாறுகளைக் கொண்டு "விஷ்டப்தாஜீர்ணம்" என்கிற வாதாஜீர்ணம் என்றறியலாம். ஒன்றிலும் "உத்சாகம்" கொள்ளாமல் ஹிருதயத்தில் ஒருவித வேதனையும், சுத்தமான ஏப்பமும் கூடியிருப்பதைப் பார்த்தால் "ரஸசேஷாஜீர்ணம்" என்று நிச்சயப்படுத்தவேண்டும். கபம், வாதம் இவைகளின் கோளாறினால் இருவித லக்ஷணங்களையும் உடைய "விலம்பிகா" என்கிற வியாதி தேகத்தினின்று வெளிப்படுத்த முடியாதபடி ஒட்டித் தங்கி இருக்கிற ஆமத்தினால் ஏற்படுகிறது. அஜீர்ணத்திற்கு ஆமமும் ஒரு காரணம் என்று கூறப்பட்டிருப்பதைக் கவனி. ஆகவே வாத பித்த கபங்களைப்போல் பெரும்பாலும் தனித்துக் கௌரவிக்கப்படவேண்டிய "ஆமம்" என்கிற தோஷம் என்றாலும் பொருந்துமே!

டா. சு: புரிகிறது. சர்மா பேச்சோடு பேச்சாக அஜீர்ணத்தில் எஞ்சிய விஷயங்களையும் விளக்கிவிட்டீர். அவைகளின் சிகித்ஸாகிரமத்தையும் கூறி விடுவது பயன்படும்.

சர்மா: சொல்லுவதற்குத் தானே விவரிக்கலானேன். இந்த ஆமாஜீர்ணம் பட்டினிப் போடுவதினாலேயே சரிபட்டு விடும். வாதத்தினாலேற்படும் விஷ்டப்தா

ஜீர்ணம் உஷ்ணமான ஒத்துடன் கொடுக்கக் குணப்படும். "விதக்தாஜீர்ணத்தில்" வாந்தி செய்வித்தால் ஆமாசயத்தில் (மேல் வயிற்றில்) சேர்ந்திருக்கும் பித்தத்தினால் கோளாறடைந்த ஆகாராதிகள் வெளிபட்டுச் சுகமேற்படும். ரஸசேஷாஜீர்ணத்தில் சாப்பிடாமலேயே சிறிது படுத்துறங்கவேண்டும்.

இவ்விதம் அஜீர்ணத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்காமல் ஹிதமான அன்னத்தை மிதமாகவும் சுசிருசியாகவும் மனதிற்குகந்த பந்துமித்திரர்களுடன் கூடிச் சாப்பிட்டிருப்பவர்களுக்கு "ஆம தோஷமே" ஏற்படாது. ஏனென்றால் அளவிற்கு மிஞ்சி உட்கொண்ட ஆகாரம் மூன்று தோஷங்களையும் கிளறிக் கோபமடையச் செய்கிறது. இதனால் வாதம், பித்தம், கபம் முதலிய தோஷங்கள் பக்குவமாகாத அதே துஷ்ட அன்னத்தில் பிரவேசித்து ஆமதோஷத்தை உற்பத்திச் செய்கின்றன. மலஜலத்தைக் கட்டி இந்த அன்னத்தை மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ போகவிடாமல் வயிற்றிலேயே தங்கும்படி செய்துவிடும் பக்ஷத்தில் அலசகம் என்ற வியாதியைத் தோற்றுவிக்கிறது. அவ்வாறின்றி வாந்தியும் பேதியும் ஆகும்படி செய்விக்கும்பொழுது விஷூசிகா என்ற வியாதியாகக் கருதப்படுகிறது. இது அனேகமாக நாக்கைக் கட்டாமல் கண்டதைச் சாப்பிடுகிறவர்களுக்கே ஏற்படுகிறது.

இவ்வாறு வைத்தியர் கூறி வருகையிலேயே நரசிம்ம அய்யர் அவசரமாக வைத்தியசாலையில் நுழைந்தார்.

"வைத்தியரே, அவசரமாக ஆத்து வரையிலும் வரணும். குழந்தைக்கு உடம்பு சரியாகவில்லை."

"அய்யர்வாள் என்ன விஷயம் சொல்லுங்களேன். பதட்டப்படாதேயுங்கள். விவரமாகச் சொல்லுங்கள். நான் வேண்டிய ஔடதங்களை எடுத்துக்கொண்டு வருகிறேன்."

"பதட்டமில்லை. ஆனால் பயமாயிருக்கோல்லையோ. ஆறு வயது பய்யன் திடீரென்று வாயிலெடுக்க ஆரம்பித்துவிட்டான். நுங்கு நுங்காக கபமும் பித்தமும் வந்தது. சாப்பிட்ட ஆகாரங்கூட சிறிது வந்தது. ஒரு தடவை கொழும்பினார் போல மலபிரவர்த்தியுமாச்சு. சோர்ந்து படுத்துக்கொண்டிருக்கான். அதான் அவசரமாக வந்தேன். கொஞ்சம் வீட்டு வரையிலும் வந்து போகணும்."

உடனே சர்மா விடங்காதி குடிகையைக் கையில் எடுத்துக்கொண்டு சுந்தரத்தைச் சிறிது நேரம் வைத்தியசாலையிலிருக்கச் சொல்லிவிட்டு நரசிம்ம அய்யர் வீட்டிற்குப் போனார்.

குழந்தை பலராமன் சோர்ந்து படுத்திருந்தான். இதற்குள் நான்கைந்து தடவை வாந்தி எடுத்துவிட்டான். இரண்டு தடவை மலமும் கழிந்தது. மிக்க பலஹீனமாக இருந்தான். வயிற்றிலும் நமநம என்று ஓர் வலி இருந்தது.

வைத்தியரைக் கண்டதும் நரசிம்மய்யர் மனைவி "டாக்டர், நீங்க வரத்துக்குள்ளே ரொம்ப பயமாப் போய்ட்டது. காலராவோ என்னமோ என்று பயந்துண்டே இருந்தேன். வந்துவிட்டேள். குழந்தையைப் பாருங்கள்."

வைத்தியர் நாடியைப் பார்த்தார். மெதுவாக நாடி அடித்துக்கொண்டிருந்தது. ஆனால் பருமன் குறைந்து லீனமாக ஆகவில்லை. சிறிது உஷ்ணமும் தூக்கினார்போல் கைக்குப் பட்டது. மலத்தைப் பார்த்தார். மஞ்சளும் பச்சையும் கலந்து வழித்தார்போலிருந்தது. அதிகமாகவே போயிருந்தது. நீர் இரண்டு தடவை இறங்கியிருந்தது.

"அம்மா, கவலைப்படாதேயுங்கள். குழந்தைக்கொன்றும் பயமில்லை. அஜீர்ணம் அதிகமாகி இப்படி தானாகவே வெளிப்பட்டு விட்டது. நாளைக்குள் சரியாகிவிடும்."

பிறகு சர்மா விடங்காதி மாத்திரையில் 4 மாத்திரைகளைக் கொடுத்து.

"இந்த மாத்திரையில் 2 எடுத்து இஞ்சிசாற்றில் நன்றாக இழையுங்கள். பிறகு ¼ பாலடை இஞ்சிசாற்றில் கலக்கிச் சிறிது தேன்கூட்டி பய்யனுக்குக் கொடுங்கள். ஆகாரம் அவனே கேழ்க்கும் வரையில் ஒன்றும் கொடுக்கவேண்டாம்.

அப்படி பசி என்று கேட்டால் நல்ல பசும் மோரைக் கொதிக்கவைத்து அதில் புழுங்கலரிசி மாவு 1 பாலடையளவும் பயத்தம்மாவு ½ பாலடை யளவும் போட்டுக் கலக்கி நன்கு வேகவைத்துக் கஞ்சி செய்து சாப்பிடக் கொடுங்கள். தொட்டுக்க வ்யஞ்சனமாக சுக்கு, அரிசிதிப்பிலி, மிளகு, கொத்துமல்லி விதை, இந்துப்பு, நல்லெண்ணெயில் பொறித்த பெருங்காயம் இவைகளைச் சமபாகமாக சேர்த்து இடித்தப் பொடியைக் கொடுங்கள். வேறு பருக்கைக் கூட கண்ணில் காட்டக்கூடாது. சாயந்திரம் விளக்கு வைக்கும் சமயம் மீதி இரண்டு மாத்திரைகளையும் கொடுங்கள். சரியாகப் போய்விடும். தாகமென்று கேட்டால். கோரைக்கிழங்குப் போட்டுக் காய்ச்சிய நீர் கொடுங்கள்" என்று சொல்லிப் புறப்பட்டார்.

வைத்தியசாலையை யடைந்ததும் டாக்டர் சுந்தரம் ஆவலுடன் விசாரித்தார்.

சர்மா : இதுதான் "விசூசிகா"! என்கிறது. அஜீர்ணத்தினலேற்பட்ட ஆம தோஷம் காரணமாக தோஷங்களை எல்லாம் கிளறி மேல் மார்க்கமாகவும் அடி மார்க்கமாகவும் தானகவே வெளிப்படுத்துகிறது. இப்பொழுது வாய்வின் சேஷ்டை உடம்பெல்லாம் குத்தல் வலியைக் கொடுக்கிறது.

டாக்டர் : ஆமாம், காலராதான் இதுவோ ?

ச : அது என்னமோ சொல்ல தற்பொழுது முடியவில்லை. நம் தத்துவமே வேறு. உங்கள் தத்துவமே வேறு. காலரா ஓர் கிருமியினல் ஏற்படுகிறது என்று சொல்லுகிறீர்கள். வடித்தக் கஞ்சியைப்போல் மலம்போகும் என்றும் சிறு நீர் தடைப்பட்டு விடும் என்றும் கை கால்களெல்லாம் சில்லிட்டுக் கொறக் களி வாங்குமென்றும் சொல்லுகிறீர்கள். உடம்பிலுள்ள நீர் எல்லாம் வெளியே போய் விடுகிறபடியால் ஏற்படும் இவ்வுபத்திரவத்தைத் தணிக்க உடனே ரக்த குழாயின் மூலம் உப்பு கரைத்த ஜலத்தை தேகத்தில் செலுத்துகிறீர்கள் என்றும் அறிவேன். ஆனல் நான் தற்பொழுதைக்குப் பார்த்தக் குழந்தைக்கு இவ்வித உபத்திரவங்களைக் காணேம். யார் கண்டார்கள் பின்னடி வரப்போகிறதை. இந்த வியாதியில் உடம்பில் சூடு ஏறி ஜ்வரம்கூட லேசாக வரும். குழந்தை பிழைத்துவிடும். இவ்வளவுதான். இன்னும் மூன்று அல்லது நான்கு நாட்களில் தலைக்கு ஜலம்கூட விட்டுவிடலாம் என்று எண்ணுகிறேன். விடங்காதி குடிகா அஜீர்ணம் விஷூசி இரண்டையும் கேழ்க்கும். பார்க்கலாம்.

டா : அனுபவத்தைச் சொல்லுகிறீர். க்ருமிகள் விஷயத்தைப்பற்றி ஆயுர்வேதத்தில் சொல்லப்பட வில்லையோ? அதனல்தான் இவ்வாறு சொல்லுகிறீர் என்று நினைக்கிறேன்.


ச : பெரிய விஷயங்களை இப்பொழுது கேழ்க்காதே. நடைமுறையில் பலன்களைக் கவனி. ஆயுர் வேததத்துவத்தை நன்கறிந்துகொள். பிறகு சமயம் வரும். அத்தருணத்தில் சாங்கோபாங்கமாக சர்ச்சை செய்தே உன் சந்தேகங்களைக் களைகிறேன். தற்பொழுதைக்கு நீ டாக்டர் என்பதை மறந்துவிட்டுக் கவனித்து வா!

டா : நீங்கள் சொல்லுவது நல்ல வழி என்றே நம்புகிறேன். அப்படியே செய்கிறேன்.

குறிப்பு :—விடங்காதி குடிகா.

சீந்தி சத்துவம், வாயுவிடங்கம், கடுக்காய் தோல், நெல்லி முள்ளி, தான்றிக்காய் தோல் (இவை மூன்றும் "திரிபலை" எனப்படும்) வசம்பு, அரிசி திப்பிலி, சுக்கு, சுத்தி செய்த சேங்கொட்டை, சுத்தி செய்த வத்ஸநாபி இவைகளை நன்கு சூர்ணம்செய்து சம அளவு கூட்டிக் கோமூத்திரம் விட்டு அரைத்துக் குன்றியளவு மாத்திரையாக உருட்டவும்.

இஞ்சி சாற்றில், ஒரு மாத்திரை அஜீர்ணம் குல்மம் முதலியவைகளுக்கும், விஷூசியில் 2 மாத்திரைகளும், சன்னிபாத ஜ்வரத்தில் 4 மாத்திரைகளும், சர்பம் கடித்தால் 3 மாத்திரைகளுமாகக் கொடுக்கலாம்.





# The Vanguard Insurance Company Ltd.

H. O. 308/309, Linghi Chetty Street, G. T. Madras

## POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

**See whether we satisfy all these requirements. If you are satisfied, Tell others. If not, Tell us.**

Total Investments in Government and other Approved Securities : Rs. 4 lakhs.

H. D. RAJAH,
*General Manager.*

# புதுப் புத்தகங்கள்

## கம்பன் மலர்

[சென்னை கம்பர்க் கழக வெளியீடு. கிடைக்குமிடம் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். மலிவுப் பதிப்பு ரூ. 2; உயர்ந்த பதிப்பு ரூ 2-8-0]

தமிழ் இலக்கியங்களிலேயே தலை சிறந்து விளங்கும் கம்பராமாயணத்தில் திளைத்து மூழ்கி எழுந்தவர்களெல்லோரும் கம்பன் மலரில் கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலிய கவிஞர்கள் தங்களுடைய பாட்டுகளால் இம்மலரை அலங்கரித்திருக்கின்றனர். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் தனது முன்னுரையில் கம்ப ராமாயணத்தை ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டுமென்று கூறுகிறார்.

மற்றும் சமீபத்தில் காலஞ் சென்ற நாவலர் வேங்கடசாமி நாட்டார், ஸ்ரீமான்கள் வையாபுரி பிள்ளை, மு. இராகவையங்கார், ரா.பி. சேதுப்பிள்ளை, பி.ஸ்ரீ., டி.கே. சி., ஸ்ரீமதிகள் இராஜேஸ்வரி அம்மையார், செல்லம் முதலியவர்களுடைய கட்டுரைகளை எல்லோரும் அவசியம் படிக்க வேண்டும். ஒவ்வொருவரும் கம்ப ராமாயணத்தின் ஒவ்வொரு சிறப்பையும் அலசி யெடுத்திருக்கிறார்கள். அதிகம் சொல்லுவானேன். இப் புஸ்தகத்தை வாசிப்பவர்கள் உடனே கம்பராமாயணத்தை எடுத்து வாசித்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்கள் !

---

## நர்மதா, பி ஏ.

[ஆசிரியர் : வி. எஸ். ராமகிருஷ்ணன் பி. ஏ. (வஸந்தன்) எழுதியது. கிடைக்குமிடம் : வி. சுப்பிரமணியம், 'கல்கி' ஏஜண்ட், தெப்ப குளம், திருச்சி. விலை ரூ 2.)

இது ஸ்ரீமான் வஸந்தனின் இரண்டாவது கதைத் திரட்டாகும். இவரது முதல் புஸ்தகம் "வெண்தாமரை முதலிய கதைகள்." இப்புஸ்தகத்திலிருக்கும் எல்லாக் கதைகளுமே சுவாரஸ்யமாக இருக்கின்றன. ஆசிரியர் தமது கதைகளில் சமுகத்தின் பழக்க வழக்கங்களை நன்ருகச் சித்தரித்திருக்கிறார். முக்கியமாக "பராசக்தி" "ஊர்மிளா" முதலிய கதைகளை உயர்ந்தவைகளாகக் கூறலாம். கண்ணைக் கவரும் மேலட்டையுடன் புஸ்தகம் நன்ருகவே இருக்கிறது.

---

## கதைக் கொடி


[ஆசிய ஜோதி பிரசுரம். மயிலாப்பூர். விலை : ரூ. 2-8-0]

தி. ஜ. ர. வின் உண்மையுரைகளை முகவுரையாகக்கொண்டு வெளி வந்துள்ள முதல் மலர். பதிப்புரையில் கூறியுள்ள படியே தமிழ் நாட்டில் நல்வரவுக்கு என்றைக்கும் பஞ்சமில்லை. சுயநலம் கருதி செய்யப்படும் எந்தக் காரியமும் முடிந்து சிறிது அவகாசம் ஏற்படும் பொழுதெல்லாம் சுறுசுறுப்பிலேயே உழன்ற மனங்கள் சும்மா இருக்கப் பழகாதவை. அச் சமயமெல்லாம் கையில் கிடைத்ததை எல்லாம் படிக்க அலையும் மனப்பான்மை நம்மில் வெகு பேர்களுக்கு இருக்கிறது. நல்லவைகளாக ஒரு கதைக் கொத்து கிடைத்து வந்திருக்கிற தென்ருல் வேண்டாமென்பார்களா! இக் கதைக் கொடியைத் தொகுக்கும் பணியே ஒரு பெரும் திருப்பணி. சக்தி ஆசிரியர் இக் கைங்கரியத்தைப் பூரண பொறுப்புடன் திறன்பட நிறைவேற்றி இருக்கிறார். இத் தொகுப்பில் 'சில கதைகள் கதா சுவாரஸ்யம் நிறைந்திருக்கின்றன ; உணர்ச்சி

# உங்களுக்கு எது வேண்டும்?




உணவு,



துணி மணிகள்,



விறகு வேண்டுமா?




அல்லது ரயில் பிரயாணமா?

இரண்டும் கிடைக்காது. இந்தியா பூராவுக்கும் தேவையான பொருள்களை தங்கு தடையின்றி ஏற்றிவர ரயில்வேக்கள் உத்திரவாதமளிக்க முடியாது; **கூடவே** கணக்கற்ற பிரயாணிகளுக்கு இடவசதியளிப்பதும் சாத்தியமில்லை. போதுமான என்ஜின்கள், வண்டிகள், வாகின்கள் கிடையா.

இந்த நிலைமையில் ரயில்வேயின் கடமை என்ன என்பதில் சந்தேகமே வேண்டாம். உணவுப் பொருள், துணிமணிகள், விறகு இவற்றிற்குத்தான் முதற் சலுகை. அவை மக்கள் வாழ்க்கைக்கு **இன்றியமையாதவை.** அவைகளில்லாவிடில் மக்கள் மடியவேண்டியதுதான்.

ஆகையால்தான் பிரயாணி வண்டிகளில் இவ்வளவு கூட்டம், நெருக்கடி. அதுவே சார்ஜுகள் அதிகரிப்புக்கும் காரணம். ஆகையால் நீங்கள் வீட்டைவிட்டு வெளியூருக்குக் கிளம்பக்கூடாது. அப்படி இருந்தால்தான் உங்களுக்கு வேண்டிய பொருள்களை கஷ்டமின்றிப்பெற வசதி யேற்படும்.

## பிரயாணத்தைக் குறையுங்கள்.

AAA 681 TM

செறிந்திருக்கும் கதைகள் சில; மற்றும் சில அழகிய கற்பனைகள்; சில, வாழ்க்கைச் சித்திரங்கள்; ஒன்றிரண்டு மனோ தத்துவ வர்ணனைகள்' என்று தி. ஜ. ர. எவ்வளவு நன்றாகப் பாகுபடுத்திச் சொல்லி இருக்கிறாரென்பதை படித்து ஆமோதியுங்கள்.

---

## ஆசியாவின் எதிர் காலம்

[ஆசிய ஜோதி பிரசுரம்: எழுதியவர் ா. ஜி. வெங்கடாச்சாரி. விலை 1-4-0.]

யுத்தம் ஆரம்பித்து இப்பொழுது ஐந்து வருடங்களாகப் போகிறது. ஐரோப்பிய முனையைவிட கிழக்காசிய முனை இன்னும் அதிக பிராபல்ய மடைய அறிகுறிகள் காண்கின்ற இச்சமயம் இப்புத்தகம் வெளி வந்திருப்பது மிக்க யுக்தமாக இருக்கிறது. இந்திய இராஜ்யம் பல இடங்களில் வ்யாபித்திருந்த வரலாறும் பிறகு எப்படி கிழக்கிந்திய தீவுகளில் அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டனவென்றும் கூறுகிறது. சீனா, ஜப்பான் இவைகளின் நிலைமையையும் உணர்ச்சிகளையும் நன்கு சித்தரித்துக் காட்டுகிறது. இந்த யுத்த முடிவைத் துரிதப்படுத்தவும் வெற்றியுள்ளதாகச் செய்யவும் அரசாங்கத்தார்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய வழிகளையும் சுட்டிக்காட்டி ஆசியாவின் எதிர்காலம் சீனா, பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா இவைகளின் கூட்டுறவின் மேல்தான் நிர்மாணிக்கப்படும் என்று கூறுவது எவ்வாறு என்பதைப் படித்துத் தேறுங்கள்.

---

## பாசரசு

[மாதம் ஒரு புத்தகம். தனிப்பிரதி அணா 12. பதிப்பாசிரியர் எம். எஸ். பாசு. பாசரசு காரியாலயம், பெரம்பூர், சென்னை]

முதல் மலர் மிக்க அழகிய சிறிய புத்தகம். நல்ல நடையில் உணர்ச்சி மிகுந்த கதைகள் நிரம்பியது. இதில் ஆசிரியரும் உதவி ஆசிரியரும் தங்கள் தங்கள் விகிதத்திற்கும் கதைகள் எழுதி இருக்கிறார்கள். கதையின் பாவம் உண்மையனுபவத்தைச் சுட்டிக்காட்டி உலக இயற்கை இது என்றறிவுறுத்துகிறது. "மிட்டாய் காரன்" "இடிந்த வீடு" இரண்டும் இவ்வித வேதாந்தத்தை நன்றாகப் புகட்டுகின்றன. "மாங்கல்யம்" என்ற சிறுகதையைப் படித்துவிட்டு மனம் உருகாமலிருக்க முடியாது. "மனமே காரணம்" என்ற கதை நீதியைப் புகட்டும் வகையில் காரியங்கள் நடக்குமேயாகில் உலகில் சிக்கலான பிரச்சினைகளே வெகு சீக்கிரத்தில் அற்றுவிடும். கலை வளர்ச்சிக்கென்று துவக்கப்பட்டிருக்கும் "பாசரசு" இத்துறையில் வெகு சீக்கிரம் பெருந்தொண்டாற்றும் நிலையை எய்தும்படி ஆசிரியர் சிரத்தை எடுத்துக்கொள்ளுவார் என்பதிற் கறிகுறி இம்முதல் மலரிலேயே தேற்சி பெற்ற எழுத்தாளர்களின் ஒத்துழைப் பிருப்பதே.

---

## ஸ்ரீமூகபஞ்சசதீ

[காமகோடி கோஸஸ்தானம். கும்பகோணம். விலை ரூ. 1-8-0]

ஸ்ரீமூககவி தேவியின் அருளால் வாக்கைப் பெற்ற வைபவத்தை உலகமறிந்து தாங்களும் அருளைப்பெறவிழைய வேண்டும் என்ற கருணைமிக்கு உணர்ச்சி ததும்ப தேவியை ஸ்தோத்திரம் செய்த பாடல்கள் 5 சதகங்களாக ஆர்யா, பாதாரவிந்த, ஸ்துதி, கடாக்ஷ, மந்தஸ்மித என்றவாறு பாகுபடுத்தப் பட்டது. இத்தோத்திர கிரந்தம். ஸ்ரீ ஜகத்குருவாகிய காமகோடி பீடாதிபதிகளின் நாராயண ஸ்ம்ருதியும் தர்மரக்ஷாமணி ஸ்ரீ கி. பால ஸுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் எழுதிய விரிவான முகவுரையுடனும் வெகு நேர்த்தியாக அச்சாகி இருக்கிறது. மேல்அட்டையில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதியாகிய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரஸரஸ்வதிகளின் நித்ய பூஜை வைபவ படமும், புஸ்தகத்தினுள் ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரி, ஸ்ரீகாஞ்சி காமாக்ஷி அம்பாள் கோவில் பெரிய கோபுரம், கம்பா ஸரஸ் முதலிய படங்களும் மிக்க

# புதிய தமிழ் இலக்கியப் போக்கின் வேகம்

[சி. வைத்தியலிங்கம்]

**வ**சன இலக்கியத்தில் நவீனம் என்ற துறையில்தான் தமிழ் பாஷையில் பல நூல்கள் வந்திருக்கின்றன. நாவல் என்பது மேல்நாட்டுச் சரக்கு. அங்கே அது நல்ல வளர்ச்சியைப் பெற்று உன்னதமான ஸ்தானத்தை அடைந்துளது. பிறநாட்டுப் பண்பில் வளர்ந்துவந்த இலக்கியத்தை நாம் எடுத்து அமைக்கும் பொழுது எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் நல்ல கலா ருசியும் கற்பனைத் திறனும் விரிந்த அறிவும் மனித இயற்கையின் வேறுபட்ட தன்மைகளையும் அறிந்த ஆசிரியனுக்கு ஆங்கிலமென்றாலென்ன? தமிழ் என்றாலென்ன? இந்தத் தன்மைகள் கொண்ட நாவல் ஆசிரியர்கள் இன்னும் தமிழ் நாட்டில் பிறக்கவில்லை என்பதே எனது துணிபு. என்றாலும் உள்ளதுக்குள் வள்ளிசாய் எடுக்கப்போனால் கா. சி. வேங்கடரமணி அவர்கள் ஒருவரே நவீனத் துறையில் இறங்கியவர்களுள் ஒரு சிறிது வெற்றியடைந்திருக்கிறார். அவர் எழுதிய 'தேச பக்தன் கந்தன்', 'முருகன் ஓர் உழவன்' என்ற இரு நாவல்களையும் தமிழுலகம் நன்றாய் அறியவில்லை. இது துக்கமான காரியமே.

ஸ்ரீ வேங்கடரமணி அவர்கள் கவிதைப் பண்பு நிறைந்தவர்கள். இந்தியா தேசத்தின் விமோசனத்துக்கு 'கிராமப் புனருத்தாரணம்' அவசியம் என்ற கொள்கை உடையவர். தேன் தோய்ந்த வாசகங்களை எழுதுவதில் நிகரில்லாதவர். காளிதாசனுக்கு நிகரான கற்பனா சக்திபடைத்தவர். 'முருகன் ஓர் உழவன்' என்னும் நவீனம் ஒரு கிராமச் சித்திரம். கதை இயற்கை வளத்துடன் தமிழ் நாட்டின் கிராமத்திலே வளர்ந்து வேகம் பெற்று நுண்ணிய கலைப்பாங்குடன் செல்கிறது. கதையின் முக்கிய பாத்திரங்கள்—ஒரு உழவன், ஒரு கிளார்க், ஒரு வக்கீல்—உயிரும் உணர்ச்சியும் கொண்ட பாத்திரங்கள். கதை நாடகத் தன்மைபெற்று உன்னதமான கவிதைப் பண்புடன் முடிவடைகிறது. 'தேசபக்தன் கந்தன்' தேசீயத்தை அடிப்படையாகக் கொண்

---

சோலையுடனமைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஸ்லோகமும் சம்ஸ்க்ருதத்தில் எழுதி அடியில் நல்ல நடையில் தமிழும் படுத்தி சிற்சில இடங்களில் அடிக்குறிப்பும் கொடுத்திருக்கிறார்கள். இப்புத்தகத்தின் முடிவில் சம்ஸ்க்ருத ஸ்லோகங்களுக்கு அகராதி அனுக்ரமணிகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் பக்தகோடிகளுக்குப் பெறும் பயன்படும் வகையில் செய்யும் கைங்கரியப் பதிப்பில் பதினேழாவது மலர் இப்புத்தகம். பக்தர்கள் இவைகளை வாங்கி மேலும் மேலும் கைங்கரியத்தைப் பெறுக்குவார்களென்று பிரார்த்திக்கிறோம்.

---

## ஸ்ரீ ஸாயி பஜனை பத்ததி

[ஸாயிஸேவா சங்கம், திருவல்லிக்கேணி, நான்காம் பதிப்பு. விலை 0-8-0]

சாயிபக்தர்கள் அனுசரித்து பஜனை செய்ய ஏற்பட்ட நன்னூல். எல்லா தர்மங்களையும் கைவிட்டு என்னையே சரணடையுங்கள் என்று கீதாசார்யன் சொல்லுகையில் நம்பினார்களோ இல்லையோ. இப்பொழுது எங்கு பார்த்தாலும் சாயி நாமம் கேழ்க்கிறது. சாதுக்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களை சிக்ஷிக்கவும் தர்மத்தை நிலைநாட்டவும் பகவான் சாயி ரூபத்தில் வந்தார் என்று கூறத் தயங்கவேண்டியதில்லை. "நானிருக்கப் பயமேன்" என்று எல்லோருக்கும் தைரியமளிக்கிறார். பல வேதங்களினுடையவும், உபநிடதங்களுடையவும் சாரமே மறுபடியும் இச்சாயி பஜனை பத்ததியில் ப்ரதிபலிக்கின்றது. பக்தர்களுக்கு நல்ல துணை இப்புத்தகமென்று கூறலாம். மேலும் பக்தியோகம் பரவி சகலரும் உய்யவேண்டுமாய்ப் ப்ரார்த்திக்கிறோம்.

டது. இந்நாவல், முருகனின் கதையின் உன்னதத்தை அடையா விட்டாலும், தமிழ் நாவல்கள் என்ற பெயரால் வெளி வந்திருக்கும் ஏனைய நூல்களிலும் சிறந்து விளங்குகிறது.

* * *

சிறு கதையும் மேல்நாட்டு இலக்கியத் தினுசுகளில் ஒன்று. கதைப் போக்குச் சுருக்கமாயிருக்கும். பாத்திரங்களும் இரண்டு அல்லது மூன்று. ஒரு ஓவியன் சித்திரக் கோல்கொண்டு எழுதும் ஒரு வளைவினால், அல்லது கோட்டால் படத்தில் கொண்டுவரும் பாவமும் உயிரும்—அவ்வளவு சக்தி சிறுகதை ஆசிரியனின் பேனா முனைக்கு இருக்க வேண்டும். இலக்கியப் பாதைகளில் மிகவும் கஷ்டமானது இச்சிறு கதைப் பாதை.

ஆனால் தமிழ் நாட்டில் இளங்கன்று பயமறியாது என்ற முறையில் அநேகர் இப்பாதையில் இறங்கி யிருக்கிறார்கள். ராஜாஜி, கல்கி, கு. ப. ராஜகோபாலன், சிதம்பரசுப்ரமண்யன், இலங்கையர்கோன், சிவபாதசுந்தரம், புதுமைப் பித்தன், குகப்பிரியை, செல்லப்பா, பிச்சமூர்த்தி இப்படி எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் சிறு கதை இலக்கணத்தை அறிந்து ஆற்றலுடன் எழுதுகிறவர்கள் மிகச் சிலரே. கு. ப. ராஜகோபாலன், புதுமைப் பித்தன், பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், செல்லப்பா, சாவித்திரி அம்மாள் ஆகிய இவர்கள் இதில் ஓரளவு வெற்றி அடைந்திருக்கிறார்கள். எல்லோரிலும் தலைசிறந்து விளங்குபவர் கு. ப. ராஜகோபாலன் என்பதே எனது அபிப்பிராயம்.

* * *

இந்தியாவில் தமிழ்மொழி பெற்று வரும் மறுமலர்ச்சியில் இலங்கைத் தமிழ் மக்களும் ஒரு சிறிது மிக் மிகச் சிறிய பங்குபற்றி யிருக்கிறார்கள். ஏதோ சிறு கதைகள், இலக்கிய ஆராய்ச்சிகள் எல்லாம் செய்துவருகிறார்கள். இவர்களுள் 'இலங்கையர்கோன்' என்ற சிவஞான சுந்தரத்தையும், சோ. சிவபாதசுந்தரமவர்களையும் குறிப்பிட வேண்டும்.


இன்னொரு ஆசிரியர் கூட்டத்தைக் கவனியாமல் விடமுடியவில்லை. இவர்கள் ஜீவந்தரா யிருந்தாலும், பாரதியாரின் இலக்கிய பரம்பரையைச் சேராதவர்கள். இவர்களுள் ஸ்ரீ. வேங்கடசாமி நாட்டார், சுவாமி விபுலானந்தர், சுவாமி வேதாசலம், கல்யாணசுந்தர முதலியார், வையாபுரிப் பிள்ளை, ரா. ராகவையங்கார் முதலியோர் பெரிய தூண்கள். இவர்கள் தமிழ்ப் புதுமையான சிருஷ்டிகளைச் செய்யாவிட்டாலும் தமிழ்ப் பாஷையின் சொல்வளத்துக்கும், புஷ்டிக்கும் தொண்டாற்றி வருகிறார்கள்.

* * *

இலக்கியமென்றால் கவிதைகளுடனும் நவீனங்களுடனும், சிறுகதைகளுடனும், உரை நூல்களுடனும் முடிந்துவிடவில்லை. தமிழ்த் தாய் கலா வீதியில் செருக்குடன் தலைநிமிர்ந்து செல்வதற்கு தமிழில் இதிகாசங்கள் வளரவேண்டும். சரித்திர வரலாறுகள் வரவேண்டும். இலக்கிய ஆராய்ச்சி நூல்கள், தர்சன வியாக்கியானங்கள் இசைக்கலை, நாடகக் கலை நூல்கள் நாடகங்கள் ஏராளமாய்ப் பெருகவேண்டும். தமிழ் மக்களும் தமிழ் நூல் கர்த்தாக்களும் இவைகளை உணர்ந்துகொண்டால் நல்லது.


[கொழும்பு வானொலியில்
21—3—44-ல் பேசப்பட்டது]


—'ஈழகேசரி'



அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக்கூடியதாகவுமிருக்க வேண்டியது ... ஆனால் அது ஊக்கத்தை அளிக்கவும் வேண்டும்!







நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப் பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவை மாத்திரமிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். சில உணவுகள் மற்றவைகளைவிட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம் வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக் கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனால் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியது அவசியம். Dept. A109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

HVM. 32-23-40 TM




மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

# மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்